www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி தமிழ்

LESS STRAIN... SCORE MORE... LOYOLA PUBLICATION, TIRUNELVELI. LP

## 11

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி
விடைக் குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு உரை நூல்.

www.Padasalai.Net

Loyola
Publications
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹. 310/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# நூலாக்கம்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.Padasalai.Net

நூலாசிரியர் :

**மு. கெஜமுத்துமாரி,** M.A., M.Phil., B.Ed.,
விக்கிரமசிங்கபுரம்,
நெல்லை

Loyola Publications



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**“தித்திக்கும் முத்தமிழே!**
**கவிதை சீதனம் தரும் எங்கள் உயிரே!**
**பூம்புனல் காவிரி தாய்மடி வளர்ந்திட்ட**
**பொதிகை மலை தந்த செல்வமே!”**

**ஈசி தமிழ் உரைநூல் மூலம் தமிழமுதைப் பருக வரும் எனதருமை மாணவச் செல்வங்களே!**

**மொழி மீது நாம் கொண்டுள்ள ஆர்வம் தான், இலக்கண இலக்கியப் பிழையற்ற, மொழி ஆளுமைத் திறனுடைய ஒரு முழு மனிதனாக நம்மை மாற்றும்.**

**முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை!**
**ஆர்வத்தோடு முயலுங்கள்!**
**அறிவினைப் அள்ளிப் பருகுங்கள்!**

**உரைநூலின் சிறப்பம்சங்கள் :**

- புத்தகப் பயிற்சி வினாக்களைப் **புத்தகப் புறநிலை வினாக்கள்** எனவும் பாடப்பகுதியின் உட்பகுதியிலிருந்து கேட்கப்படும் வினாக்களை **அகநிலை வினாக்கள்** எனவும் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.
- கூடுதல் வினாக்களாக இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி விதிகள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.
- அணி, திணை மற்றும் துறைகளுக்கான விடைகள், முழு மதிப்பெண் பெறுவதற்கான உரிய முறையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
- தலைப்புகள், துணைத்தலைப்புகள், தனித்தனித் தொடர்களாக எழுதும் பாங்கு போன்றவை மாணவர்களின் படிப்பார்வத்தைத் தூண்டும் தூண்டுகோலாக விளங்கும் வகையில் அமைந்துள்ளன.
- **எட்டி எட்டி முயன்று,**
  **தரவரிசையில் முதன்மை இடம்பிடிக்க,**
  **வழித்துணையாக வரும் இந்த உரைநூல்**
  மாணவர்களின் அறிவுப் பெட்டகத்திற்கு ஓர் உரைகல்லாக அமைந்துள்ளது.

  **அரிதின் முயன்று தேடிப்பெறும் செல்வமாக,**
  **இந்த ‘ஈசி தமிழ் உரைநூல்’ மூலம்**
  **எளிதின் முயன்று தமிழ்ச் செல்வத்தை அடைந்தால்**

  **வானமும் வசப்படும்!**
  **உங்கள் கைகளில் ....**
  **என்ற வாழ்த்துகளும் வணக்கங்களும் ....**
- தமிழ் உரைநூல் எழுதுவதற்கு அரியதொரு வாய்ப்பினை எனக்கு நல்கிய ‘**லொயோலா ஈசி**’ பதிப்பகத்தார்க்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளும் வணக்கங்களும் ....

**என்றென்றும் தமிழுடன் ...**

**மு.கெஜமுத்துமாரி**
திருநெல்வேலி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்



| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் (ஆசிரியர் பெயர்) | பக்க எண் |
|---|---|---|---|---|
| | | | மனப்பாடப் பகுதிகள்* | 6 |
| 1 | மொழி **என்னுயிர் என்பேன்** | செய்யுள் | யுகத்தின் பாடல்* – சு. வில்வரத்தினம் | 9 |
| | | உரைநடை | பேச்சு மொழியும் கவிதை மொழியும் – இந்திரன் | 15 |
| | | செய்யுள் | நன்னூல் பாயிரம்* – பவணந்தி முனிவர் | 24 |
| | | துணைப்பாடம் | ஆறாம் திணை – அ. முத்துலிங்கம் | 31 |
| | | இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 34 |
| 2 | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் **மாமழை போற்றுதும்** | உரைநடை | இயற்கை வேளாண்மை | 45 |
| | | செய்யுள் | ஏதிலிக்குருவிகள் – அழகிய பெரியவன் | 50 |
| | | | காவியம்* – பிரமிள் | 56 |
| | | | திருமலை முருகன் பள்ளு – பெரியவன் கவிராயர் | 58 |
| | | | ஐங்குறுநூறு (முல்லைத்திணை) – பேயனார் | 66 |
| | | துணைப்பாடம் | யானை டாக்டர் – ஜெயமோகன் | 71 |
| | | இலக்கணம் | புணர்ச்சி விதிகள் | 73 |
| | | | மெய்ம்மயக்கம் | 82 |
| 3 | பண்பாடு **பீடு பெற நில்** | உரைநடை | மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு – ஆர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. | 91 |
| | | செய்யுள் | காவடிச்சிந்து – சென்னி குளம் அண்ணாமலையார் | 97 |
| | | | குறுந்தொகை* – வெள்ளி வீதியார் | 104 |
| | | | புறநானூறு* – கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி | 110 |
| | | துணைப்பாடம் | வாடிவாசல் – சி.சு. செல்லப்பா | 116 |
| | | இலக்கணம் | பகுபத உறுப்புகள் | 118 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* – திருவள்ளுவர் | 127 |
| 4 | கல்வி **கேடில் விழுச்செல்வம்** | உரைநடை | தமிழகக் கல்வி வரலாறு | 145 |
| | | செய்யுள் | பிள்ளைக்கூடம் – இரா. மீனாட்சி | 152 |
| | | | நற்றிணை – போதனார் | 156 |
| | | | தொல்காப்பியம் – சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் – தொல்காப்பியர் | 163 |
| | | துணைப்பாடம் | இதழாளர் பாரதி | 167 |
| | | இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | 169 |





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


| | | | | |
|---|---|---|---|---|
| 5 | நாகரிகம், தொழில், வணிகம் **நாளெல்லாம் வினைசெய்** | உரைநடை | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 179 |
| | | செய்யுள் | சீறாப்புராணம் – உமறுப்புலவர் | 183 |
| | | | அகநானூறு – வீரைவெளியன் தித்தனார் | 189 |
| | | துணைப்பாடம் | பிம்பம் – பிரபஞ்சன் | 198 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் (ஆசிரியப்பா) | 200 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* – திருவள்ளுவர் | 214 |
| 6 | கலை, அழகியல், புதுமைகள் **பல்கலை நிறுவு** | உரைநடை | காலத்தை வென்ற கலை | 224 |
| | | செய்யுள் | ஆத்மா நாம் கவிதைகள் – ஆத்மாநாம் | 227 |
| | | | குற்றாலக் குறவஞ்சி – திரிகூட ராசப்பக் கவிராயர் | 230 |
| | | | திருச்சாழல் – மாணிக்கவாசகர் | 234 |
| | | துணைப்பாடம் | இசைத் தமிழர் இருவர் | 240 |
| | | இலக்கணம் | கலைச் சொல்லாக்கம் | 243 |
| | | | நிறுத்தக் குறிகள் | 246 |
| 7 | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **வையத் தலைமை கொள்** | உரைநடை | காற்றில் கலந்த பேரோசை – சுந்தர ராமசாமி | 257 |
| | | செய்யுள் | புரட்சிக்கவி* – பாரதிதாசன் | 260 |
| | | | பதிற்றுப்பத்து – குமட்டூர்க் கண்ணனார் | 269 |
| | | துணைப்பாடம் | சிந்தனைப் பட்டிமன்றம் | 273 |
| | | இலக்கணம் | ஆக்கப்பெயர்கள் | 275 |
| 8 | மனிதம், ஆளுமை **யாரையும் மதித்து வாழ்** | உரைநடை | தாகூரின் கடிதங்கள் | 284 |
| | | செய்யுள் | ஒவ்வொரு புல்லையும் – இன்குலாப் | 288 |
| | | | தொலைந்து போனவர்கள்* – அப்துல் ரகுமான் | 291 |
| | | | மனோன்மணீயம் – பேராசிரியர். பெ. சுந்தரனார் | 295 |
| | | துணைப்பாடம் | செவ்வி – நர்த்தகி நடராஜ் | 305 |
| | | இலக்கணம் | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | 307 |
| | | | * வாழ்வியல் நிகழ்வு | 317 |
| | | | * கவிதை | 319 |
| | | | * கூடுதல் மொழிப்பயிற்சிகள் | 320 |
| * அரசு பொதுத் தேர்வு – மே 2022 | | | | 338 |
| * அரசு துணைத்தேர்வு – ஆகஸ்ட் 2022 | | | | 342 |
| * அரசு பொதுத் தேர்வு – மார்ச் 2023 | | | | 345 |


www.Padasalai.Net



★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## மனப்பாடப் பகுதிகள்

### இயல் : 1

**1. யுகத்தின் பாடல்**

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

– சு. வில்வரத்தினம்.

**2. நன்னூல் - பாயிரம்**

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே

நூற்பா – 47

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே

நூற்பா – 48

– பவணந்தி முனிவர்

### இயல் : 2

**3. காவியம்** **ஆகஸ்ட்-2022**

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது. – பிரமிள்

### இயல் : 3

**4. குறுந்தொகை** **மார்ச்-2023**

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே. (146)

வெள்ளி வீதியார்

பா : நேரிசை ஆசிரியப்பா

பா விளக்கம் :

ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் பெற்று வந்துள்ளதால் இப்பாடல், நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

**5. புறநானூறு**

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (182)

– கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

பா : நேரிசை ஆசிரியப்பா

பா விளக்கம் :

ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் பெற்று வந்துள்ளதால் இப்பாடல் நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

**6. திருக்குறள்**

**அடக்கமுடைமை**

அ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

ஆ) யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

**ஒப்புரவறிதல்**

அ) தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

ஆ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

**புகழ்**

அ) தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

ஆ) வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**நிலையாமை**

அ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

**துறவு**

அ) யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஆ) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**வலியறிதல்**

அ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.
**மார்ச்-2020** **மார்ச்-2023**

ஆ) அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

**காலமறிதல்**

அ) ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின். - திருவள்ளுவர்.
**ஆகஸ்ட்-2022**

பா : குறள் வெண்பா
பா விளக்கம் :
வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, முதலடியில் நான்கு சீர்களும், இரண்டாமடியில் மூன்று சீர்களும் பெற்று ஈரடியில் அமைந்துள்ளதால் குறள் வெண்பா ஆகும்.

## இயல் : 5

### 7. திருக்குறள்

**குறிப்பறிதல்**

அ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

**பகைத்திறம் தெளிதல்**

அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

**மருந்து**

அ) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

ஆ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.
**மார்ச்-2020** **மார்ச்-2023**

**இரவச்சம்**

அ) இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். - திருவள்ளுவர்
**மே-2022**
பா : குறள் வெண்பா
பா விளக்கம் :

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, முதலடியில் நான்கு சீர்களும், இரண்டாமடியில் மூன்று சீர்களும் பெற்று ஈரடியில் அமைந்துள்ளதால் குறள் வெண்பா ஆகும்.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இயல் : 7

**8. புரட்சிக்கவி** **மே-2022**

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?
- பாரதிதாசன்

பா : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பா விளக்கம் :

- அடிதோறும் எட்டு சீர்களையும், பல ஈரசைச் சீர்களையும் பெற்று வந்துள்ளது.
- அகவலோசை பெற்று வந்துள்ளது. எனவே, இப்பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும்.

## இயல் : 8

**9. தொலைந்து போனவர்கள்**

அ) உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

ஆ) தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் - பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

இ) 'நான்' என்பாய் அது நீயில்லை - வெறும்
நாடக வசனம் பேசுகிறாய் **மார்ச்-2020**
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை - அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.
- அப்துல் ரகுமான்

பா : சிந்து

பா விளக்கம் :

அளவொத்த இரண்டடிகளையும் ஓரெதுகையையும் பெற்று வரும் பாடல் சிந்துப்பா ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com



மொழி

# என்னுயிர் என்பேன்

இயல்: 1

| | | | |
|---|---|---|---|
| கவிதைப்பேழை | : யுகத்தின் பாடல் | விரிவானம் | : ஆறாம் திணை |
| உரைநடை உலகம் | : பேச்சுமொழியும் கவிதை மொழியும் | இனிக்கும் இலக்கணம் | : மொழி முதல், இறுதி எழுத்துகள் |
| கவிதைப்பேழை | நன்னூல் - பாயிரம் | | |

## கவிதைப்பேழை – யுகத்தின் பாடல் - சு. வில்வரத்தினம்

### சொல்லும் பொருளும்:–

1. என் அம்மை → தமிழ் மொழியாகிய அன்னை
2. நெற்றிமண் → திருநீறு
3. தொழுதவர் → வழியைப் பின்பற்றி வணங்கியவர்
4. உழுதவர் → தமிழைச் சீர்படுத்தியவர்
5. விதைத்தவர் → தமிழின் சிறப்பைப் பரப்பியவர்
6. வியர்த்தவர் → தமிழுக்குத் தொண்டு செய்தவர் / உயரப் பாடுபட்டவர்
7. நிறைமணி → நல் விளைச்சலான ஞானம்
8. கனைகடல் → ஒலிக்கும் அலைகளையுடைய கடல்
9. மலைமுகடு → மலையின் உச்சி
10. காவு → பலி கொடுத்தல்
11. தொல்கனிமம் → தொன்மையான இலக்கண இலக்கியங்கள்
12. உரமெலாம் → வலிமையெல்லாம்
13. மண்ணிலே தீட்டித்தீட்டி → மண்ணில் விரல் வைத்து முதன்முதலாக எழுதக் கற்றுக் கொள்ளல்
14. திசைகளின் சுவரெலாம் → எட்டுத்திசைகள் முழுவதும்
15. எழுகின்ற → தோன்றுகின்ற
16. யுகத்தினோர் பாடல் → புது யுகத்திற்கான பாடல்

### நம்மை அளப்போம்

**I. பலவுள் தெரிக:–**

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **"கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்**
**காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்"**
**அடிமோனையைத் தெரிவு செய்க.**

அ) கபாடபுரங்களை – காவுகொண்ட
ஆ) காலத்தால் – கனிமங்கள்
இ) கபாடபுரங்களை – காலத்தால்
ஈ) காலத்தால் – சாகாத

**விடை: (இ) கபாடபுரங்களை – காலத்தால்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



### அகநிலை வினாக்கள்:–

1. மனித இனத்தின் ஆதி அடையாளம் ________
அ) மொழி ஆ) இலக்கியம் இ) இலக்கணம் **விடை: அ) மொழி**

2. ஓர் இனத்தின் ________ ஆக விளங்குவதும் மொழியே ஆகும்.
அ) முதற்புள்ளி ஆ) முற்றுப்புள்ளி இ) மையப்புள்ளி **விடை: இ) மையப்புள்ளி**

3. நிறைமணி தந்தவள் ________
அ) அன்னை ஆ) தமிழன்னை இ) பாரத அன்னை **விடை: ஆ) தமிழன்னை**

4. காலத்தால் சாகாதது ________
அ) தமிழ் மொழி ஆ) ஆங்கில மொழி இ) பிரெஞ்சு மொழி **விடை: அ) தமிழ் மொழி**

5. ________ தொடக்கி வைத்து என்னம்மை மண்ணிலே தீட்டி எழுதுவித்தாள்.
அ) ஏடு ஆ) இலக்கணம் இ) கவிதை **விடை: அ) ஏடு**

6. விரல்முனையைத் தீயிலே தோய்த்து ________ சுவரெலாம் எழுத வேண்டும்.
அ) தெருக்களின் ஆ) வீடுகளின் இ) திசைகளின் **விடை: இ) திசைகளின்**

7. படிப்போரின் ஆழ்மனதில் ________ ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.
அ) மரபுக்கவிதை ஆ) புதுக்கவிதை இ) வசனக்கவிதை **விடை: ஆ) புதுக்கவிதை**

8. புதுக்கவிதை படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் ________ கொண்டது.
அ) முற்போக்கு சிந்தனை ஆ) பிற்போக்கு சிந்தனை
இ) பன்முகத்தன்மை **விடை: இ) பன்முகத்தன்மை**

9. 2001-இல் தொகுக்கப்பட்ட சு. வில்வரத்தினத்தின் நூல் ________ .
அ) முப்படை நகரம் ஆ) உயிர்த்தெழும் காலத்துக்காக
இ) சாம்பல் வார்த்தைகள். **விடை: ஆ) உயிர்த்தெழும் காலத்துக்காக**

10. கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்ட கவிஞர் ________ .
அ) சு. வில்வரத்தினம் ஆ) இரசூல் கம்சதோவ் இ) இந்திரன் **விடை: அ) சு. வில்வரத்தினம்**

11. புங்குடுத்தீவில் பிறந்தவர் ________ .
அ) இந்திரன் ஆ) சு. வில்வரத்தினம் இ) இரசூல் கம்சதோவ் **விடை: ஆ) சு. வில்வரத்தினம்**

12. "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை,
வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை" - என்றவர் ________ .
அ) இரசூல் கம்சதோவ் ஆ) மகாகவி பாரதி இ) பாரதிதாசன் **விடை: அ) இரசூல் கம்சதோவ்**

## II. குறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க் கெல்லாம்
நிறைமணி தந்தவளே !**

**இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

**வினையாலணையும் பெயர்கள்:–** ❖ தொழுதவர் ❖ உழுதவர் ❖ விதைத்தவர் ❖ வியர்த்தவர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.** ஆகஸ்ட்-2022 மார்ச்-2023
   ➢ "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை" என்று இனம், மொழி குறித்த தமது பார்வையைக் குறிப்பிடுகிறார் இரசூல் கம்சதோவ்.

## அகநிலை வினாக்கள்:–

1. **புதுக்கவிதை என்பது யாது?**
   ➢ மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர்.

2. **நம் இருப்பின் அடையாளம் எது?**
   ➢ நம் இருப்பின் அடையாளமாக விளங்குவது நம் தாய்மொழியே ஆகும்.

3. **தமிழ் மொழி இன்று வரையும் செழித்தோங்கி இருப்பது எவ்வாறு?**
   ➢ நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் வேர், சங்கத்தில் தொடங்கி, இன்றைய காலம் வரையும் இடர்பல களைந்து, உயர்தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கிறது.

4. **நிறைமணியைத் தந்தவள் யார்? யார் யார்க்கெல்லாம் தந்தாள்?**
   ➢ நிறைமணியைத் தந்தவள் தமிழன்னை.
   ➢ தமிழன்னையின் திருவடி மண்ணை நெற்றியில் இட்டுக்கொண்டு வழிவழியாகத் தமிழுக்குத் தொண்டாற்றி, அவள் திருவடியைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்க்கெல்லாம் நிறைமணியைத் தந்தாள்.

5. **யாருக்குப் பல்லாண்டு பாட வேண்டும்?**
   ➢ தமிழன்னையின் திருவடியைத் தொழுது அவள் வழியைப் பின்பற்றி
   ➢ தமிழைப் பண்படுத்தி
   ➢ நன்னெறிகளை விதைத்து
   ➢ தமிழ்மொழி செழித்தோங்கி வளர

   உழைத்தவர்க்கெல்லாம் ஞானமாகிய விளைச்சலைத் தந்த தமிழன்னைக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பாட வேண்டும்.

6. **தமிழ்ப்பாடல்கள் எவற்றையெல்லாம் கடந்து செல்வதாகக் கவிஞர் சு. வில்வரத்தினம் குறிப்பிடுகிறார்?**
   ➢ தமிழ்ப் பாடல்கள் காற்றிலேறி, அது செல்லும் திசையெங்கும் சென்று
   ➢ அலைகின்ற கடலையும்
   ➢ நெருப்பாற்றையும்
   ➢ மலைமுகடுகளையும்

   கடந்து செல்வதாகக் கவிஞர் சு. வில்வரத்தினம் குறிப்பிடுகிறார்.

7. **கடல்கோளால் கொள்ளப்பட்ட பகுதி எது?**
   ➢ முதல், இடைத் தமிழ்ச்சங்கங்கள் அமைந்த லெமூரியா கண்டத்திலுள்ள கபாட புரமே கடல்கோளால் கொள்ளப்பட்ட பகுதி ஆகும்.

8. **எதை எழுத வேண்டும் எனக் கவிஞர் சு. வில்வரத்தினம் விரும்புகிறார்?**
   ➢ ஏடு தொடக்கி வைத்துத் தமிழன்னை கற்றுக் கொடுத்த தமிழ் மொழியினில் திசைகள் தோறும் சென்று, எழுகின்ற புதிய யுகத்தினோர் பாடலை எழுத வேண்டும் என்று கவிஞர் சு. வில்வரத்தினம் விரும்புகிறார்.

9. **நான் குரலற்றுக் கிடந்தது எப்போது?**
   ➢ அந்நிய தேசத்தில் அகதியாக இருந்த நான் என் உணர்வுகளைச் சொல்ல முடியாமலும் உதற முடியாமலும் குரலற்றுக் கிடந்தேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

10. **நான் துள்ளி உயிர்த்தெழுந்தது எப்போது?**
- ➢ என் காயத்தை வருடி என்னை மின்னலெனக் கடந்து சென்ற தாய்மொழியாம் தமிழின் அமுதிசை கேட்டு நான் துள்ளி உயிர்த்தெழுந்தேன்.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?** மார்ச்-2023

**பாடத்தான் வேண்டும்:**
- ➢ காற்றிலேறி, அது செல்லும் திசையெங்கும் சென்று அலைகடல், நெருப்பாறு, மலை முகடுகளையெல்லாம் கடந்து எட்டுத் திசையெங்கும் சென்று பரவுகின்ற தமிழ்ப்பாடலின் சிறப்பைப் பாடத்தான் வேண்டும்.
- ➢ முதல், இடைத் தமிழ்ச்சங்கங்கள் அமைந்த லெமூரியா கண்டத்திலுள்ள கபாடபுரமே கடல்கோளால் அழிந்த பின்பும், இக்காலம் வரை தமது தொன்மை வளம் குன்றாத வலிமை மிக்க **தமிழ் மொழியைப்** பாடத்தான் வேண்டும் என்கிறார் ஆசிரியர் சு. வில்வரத்தினம்.

2. **'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.**

**தாய்மொழி :-**
- ➢ நம் தாய் மொழியாகிய தமிழை "உயர்தனிச்செம்மொழி" என்பர். தமிழ் உயர்ந்த மொழி, தனித்த மொழி, செம்மையான மொழி என்பது இதன் பொருள்.

**முத்தமிழ் :-**
- ➢ முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம் ஆகும். இயற்றமிழ் எண்ணத்தை வளர்க்கும். இசைத் தமிழ் உள்ளத்தை உருக்கி ஒரு முடிவுக்கு வரச் செய்யும். நாடகத்தமிழ் நடந்து காட்டி மக்களை நல்வழிப்படுத்தும். எண்ணமும் துணிவுமின்றி எச்செயலும் நடைபெறாது.

**தமிழின் இனிமை :-**
- ➢ தமிழ் என்றால் இனிமை, அழகு, இளமை, தேன்தமிழ், தீந்தமிழ் முதலான சொற்களின் பொருளால் இதை உணரலாம்.
- ➢ வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்று இனங்களிலிருந்தும் ஒவ்வோர் எழுத்தைப் பெற்று 'தமிழ்' என அமைந்திருப்பது என்னை வியப்பில் ஆழ்த்துகிறது.

  "தமிழுக்கு அமுதென்று பேர் - இன்பத்
  தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

**தனிச்சிறப்பு - பக்திமொழி :-**
- ➢ தமிழ்மொழி பக்தி மொழி. மனித இரக்க உணர்வைப் பெருமிதமாகப் போற்றும் அன்பு மொழி. உலகில் வேறு எந்த மொழியிலும் காணக்கிடைக்காத அளவு பக்திப்பாசுரங்கள் நிரம்பிய மொழி தமிழ் ஒன்றே.

**செந்தமிழ் நாடு :-**
- ➢ நம் நாட்டிற்கு அடைமொழியாக நமது மொழியும், மொழிக்கு அடைமொழியாகச் 'செம்மையும்' அமைந்திருப்பது பெரிதும் வியப்பிற்குரியது.
- ➢ இத்தகைய என் தாய்மொழியாகிய "தமிழ்மொழியை என்னுயிர் என்பேன்".

  "உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே"

### அகநிலை வினாக்கள்:–

1. **சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?**

**பல்லாண்டு வாழ வேண்டும்:**
- ➢ தமிழன்னையின் திருவடி மண்ணை நெற்றியில் இட்டுக்கொள்ளும் திலகம் அவளது புகழ் மணம் பரப்பி அழகு தரும்.
- ➢ பிறமொழி நாடாது வழிவழியாகத் தமிழன்னையின் திருவடியை வணங்கியவர்களுக்கும்,
- ➢ நிலத்தினை உழுதவர் போன்று தமிழ்மொழியைச் சீர்செய்து பண்படுத்தியவர்களுக்கும்,

www.Padasalai.Net www.CBSEtips.in



- விளைநிலத்தில் நல்வித்தினை விதைத்தவர் போன்று தமிழ் மொழியில் நன்னெறிகளைப் பரப்பியவர்களுக்கும்
- களையை நீக்கி பயிர் வளர உழைத்து வியர்த்தவர் போன்று தமிழ் மொழியில் இடர் பல களைந்து உயர்தனிச் செம்மொழியாய் செழித்தோங்கி வளர அரும்பாடுபட்டவர்களுக்கும்,
- நிறைமணி போன்ற நல் விளைச்சலான தமிழ் ஞானத்தினை அருளிய தமிழன்னையைக் கவிஞர் சு. வில்வரத்தினம் பல்லாண்டு வாழ வேண்டும் எனப் பாடுவது வெகு சிறப்பாகப் பொருந்துகிறது.

**2. எழுதத்தான் வேண்டும் என்று ஆசிரியர் சு. வில்லவரத்தினம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

**ஏடு தொடக்கி வைத்த தமிழன்னை :-**

- தமிழன்னை ஏடு தொடக்கி வைத்து, என் விரலைப் பிடித்து மண்ணில் முதன் முதலில் எழுதக் கற்றுக் கொடுத்த தமிழ் மொழியினில்,

**புது யுகத்திற்கான பாடல் :-**

- திசையெங்கிலும் உள்ள உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று, வரப்போகின்ற புது யுகத்திற்கான பாடலை எழுதத்தான் வேண்டும் என்கிறார் ஆசிரியர் சு. வில்வரத்தினம்.

**3. கவிஞர் சு. வில்வரத்தினம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

**கவிஞர் சு. வில்வரத்தினம் :-**

- யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத்தீவில் பிறந்தவர். இவருடைய கவிதைகள் மொத்தமாக, 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்ற தலைப்பில் 2001-இல் தொகுக்கப்பட்டது. கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப்பாடும் திறனும் கொண்டவர். இலங்கைத் தமிழரான இவரது காலம் 1950 முதல் 2006 வரை ஆகும்.

**4. புதுக்கவிதை குறித்து விளக்கம் தருக.**

**புதுக்கவிதை :-**

- மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர்.
- படிப்போரின் ஆழ்மனதில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.
- இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது.

## IV. இலக்கணக் குறிப்பு தருக

### அகநிலை வினாக்கள்:–

1. நெற்றிமண் → ஏழாம் வேற்றுமைத் தொகை
2. வழிவழி → அடுக்குத் தொடர்
3. நிறைமணி → வினைத்தொகை
4. பல்லாண்டு பல்லாண்டு → அடுக்குத் தொடர்
5. கனைகடல் → வினைத்தொகை
6. நெருப்பாற்றை → உருவகம்
7. மலைமுகடு → ஏழாம் வேற்றுமைத் தொகை
8. கடந்து → வினையெச்சம்
9. தீட்டித்தீட்டி → அடுக்குத் தொடர்
10. விரல் முனை → ஆறாம் வேற்றுமைத் தொகை

## V. புணர்ச்சி விதி தருக

### அகநிலை வினாக்கள்:–

1. ஒற்றியெடுத்த = ஒற்றி + எடுத்த

(i) "இ ஈ ஐ வழி யவ்வும்" என்ற விதிப்படி,
'ய்' தோன்றியது
ஒற்றி ய் + எடுத்த



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



(ii) “உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே” என்ற விதிப்படி,
ய் + எ = “யெ” ஆனது
ஒற்றியெடுத்த என்று புணர்ந்தது

2. நினதடி = நினது + அடி
(i) “உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்” என்ற விதிப்படி,
து→த் + உ →‘உ’ நீங்கியது
= நினத் + அடி
(ii) “உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே” என்ற விதிப்படி,
த் + அ = “த” ஆனது
= நினதடி என்று புணர்ந்தது

3. பல்லாயிரத்தாண்டு = பல + ஆயிரத்தாண்டு
(i) “பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக
லகரம் றகரம் ஆகலும் பிறவரின்
அகரம் விகற்பம் ஆகலும் உளபிற” என்ற விதிப்படி,
ல→ல் + அ →‘அ’ நீங்கியது
= பல் + ஆயிரத்தாண்டு
(ii) “தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்” என்ற விதிப்படி,
“ல்” இரட்டித்தது
= பல்ல் + ஆயிரத்தாண்டு
(iii) “உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே” என்ற விதிப்படி,
ல் + ஆ = “லா” ஆனது
= பல்லாயிரத்தாண்டு என்று புணர்ந்தது

4. காற்றிலேறி - காற்றில் + ஏறி
(i) “உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே” என்ற விதிப்படி
ல் + ஏ = “லே” ஆனது
= காற்றிலேறி என்று புணர்ந்தது.

5. நெருப்பாற்றை - நெருப்பு + ஆற்றை
(i) “உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்” என்ற விதிப்படி
பு = ப் + உ - ‘உ’ நீங்கியது
= நெருப்ப் + ஆற்றை
(ii) “உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே” என்ற விதிப்படி
ப் + ஆ = “பா” ஆனது
= நெருப்பாற்றை என்று புணர்ந்தது

6. செல்லுமோர் - செல்லும் + ஓர்
(i) “உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே” என்ற விதிப்படி
ம் + ஓ = “மோ” ஆனது
= செல்லுமோர் என்று புணர்ந்தது

7. உரமெலாம் - உரம் + எலாம்
(i) “உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே” என்ற விதிப்படி
ம் + எ = “மெ” ஆனது
= உரமெலாம் என்று புணர்ந்தது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



8. என்னம்மை – என் + அம்மை

(i) "தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்ற விதிப்படி
'ன்' இரட்டித்தது
= என்ன் + அம்மை

(ii) "உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி
ன் + அ = "ன" ஆனது
= என்னம்மை என்று புணர்ந்தது

9. சுவரெலாம் – சுவர் + எலாம்

(i) "உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி
ர் + எ = "ரெ" ஆனது
= சுவரெலாம் என்று புணர்ந்தது

10. யுகத்தினோர் – யுகத்தின் + ஓர்

(i) "உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி
ன் + ஓ = "னோ" ஆனது
= யுகத்தினோர் என்று புணர்ந்தது

## உரைநடை: பேச்சு மொழியும் கவிதை மொழியும்

- இந்திரன்

### நம்மை அளப்போம்

**I. பலவுள் தெரிக:–**

**புத்தகப் புறநிலை வினாக்கள்:–**

1. **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.** **மே-2022**

அ) அ. முத்துலிங்கம் – யுகத்தின்பாடல் ஆ) பவணந்திமுனிவர் – நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் – ஆறாம் திணை ஈ) இந்திரன் – பேச்சு மொழியும் கவிதை மொழியும்

(i) அ, ஆ (ii) அ, ஈ (iii) ஆ, ஈ (iv) அ, இ

**விடை: (iii) ஆ, ஈ**

2. **ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிற போது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை
இ) எழுத்து மொழியை விட பேச்சுமொழி எளிமையானது.
ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

**விடை: இ) எழுத்து மொழியை விட பேச்சுமொழி எளிமையானது**

**அகநிலை வினாக்கள்:–**

1. **கவிதையினைப் 'பேசுவது போல் எழுதுவது தான் உத்தமம்' என்று கூறியவர் ................** **மார்ச்-2020**

அ) மகாகவி பாரதி ஆ) இந்திரன் இ) வால்ட் விட்மன்

**விடை: அ) மகாகவி பாரதி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. பெயர்களுக்கு, முக்காலமாகிய வண்ணங்களைப் பூசும் சக்தியைக் கொடுத்தது ..............................
அ) எழுத்து ஆ) சொல் இ) மொழி விடை: இ) மொழி

3. எனது .............................. என்பது மொழியினால் கட்டமைக்கப்பட்டது.
அ) கவிதை ஆ) உலகம் இ) பொருள் விடை: ஆ) உலகம்

4. உணர்ச்சிக்கு மிக அருகில் இருப்பது ..............................
அ) பேச்சு மொழி ஆ) கவிதை இ) எழுத்து மொழி விடை: அ) பேச்சு மொழி

5. எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க .............................. கிடையாது.
அ) எதிராளி ஆ) கவிஞன் இ) ஆசிரியர் விடை: அ) எதிராளி

6. தனக்குத்தானே பேசிக் கொள்கிற பேச்சு ..............................
அ) பேச்சுமொழி ஆ) எழுத்து மொழி இ) கவிதை விடை: ஆ) எழுத்துமொழி

7. பேச்சு என்பது .............................. மே -2022
அ) மொழியில் நீந்துவது ஆ) பேச்சில் நீந்துவது இ) எழுத்தில் நீந்துவது
விடை: அ) மொழியில் நீந்துவது

8. பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் .............................. வகையினர் உண்டு.
அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து விடை: ஆ) மூன்று

9. வால்ட் விட்மனின் உலகப்புகழ் பெற்ற நூல் ..............................
அ) நுண்கலை ஆ) புல்லின் இதழ்கள் இ) முப்படை நகரம் விடை: ஆ) புல்லின் இதழ்கள்

10. வால்ட் விட்மன் .............................. இயக்கத்தைத் தோற்றுவித்தவர்
அ) புதுக்கவிதை ஆ) மரபுக்கவிதை இ) ஹைக்கூ விடை: அ) புதுக்கவிதை

11. ஸ்டெஃபான் மல்லார்மே .............................. நாட்டைச் சேர்ந்தவர்.
அ) சிலி ஆ) அமெரிக்கா இ) பிரான்சு விடை: இ) பிரான்சு

12. குறியீட்டியத்தைப் புரிந்து கொள்ளக் காரணமானவர் ..............................
அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே இ) பாப்லோ நெரூடா விடை: ஆ) மல்லார்மே

13. 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர் .............................. ஆகஸ்ட்-2022
அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே இ) பாப்லோ நெரூடா விடை: இ) பாப்லோ நெரூடா

14. சிலி நாட்டில் பிறந்த கவிஞர் ..............................
அ) பாப்லோ நெரூடா ஆ) மல்லார்மே இ) வால்ட் விட்மன் விடை: அ) பாப்லோ நெரூடா

15. வால்ட் விட்மன் கவிதையில், அவர் கனவில் வந்த நகரம் ..............................
அ) நண்பர்கள் நகரம் ஆ) கவிஞர்கள் நகரம் இ) அறிஞர்கள் நகரம் விடை: அ) நண்பர்கள் நகரம்

16. கலை விமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர் ..................
அ) வால்ட் விட்மன் ஆ) இந்திரன் இ) மகாகவி பாரதி விடை: ஆ) இந்திரன்

17. "பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம்" என்ற மொழிபெயர்ப்பு நூல், 2011ஆம் ஆண்டு பெற்ற விருது ..............................
அ) ஞானபீட விருது ஆ) சாகித்திய அகாதெமி இ) நோபல் விடை: ஆ) சாகித்திய அகாதெமி

18. சாம்பல் வார்த்தைகள், முப்பட்டை நகரம் உள்ளிட்ட கவிதை நூல்களைப் படைத்தவர் ....................
அ) மல்லார்மே ஆ) மகாகவி பாரதி இ) இந்திரன் விடை: இ) இந்திரன்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**19. ஆசிரியர் இந்திரன் நடத்திய இதழ்கள் ..............., .................,**
அ) வெளிச்சம், நுண்கலை ஆ) குயில், இந்தியா இ) குடியரசு, வெளிச்சம்
விடை: அ) வெளிச்சம், நுண்கலை

**20. ஒவ்வொரு மொழியிலும் தோன்றும் கவிதைகளில், காலத்துக்குக் காலம் ................................ ஏற்படுவது வழக்கம்.**
அ) அழுத்த வேறுபாடுகள் ஆ)சொல் வேறுபாடுகள் இ) பொருள் வேறுபாடுகள்
விடை: அ) அழுத்த வேறுபாடுகள்

**21. வால்ட் விட்மனின் கவிதையை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் .......................**
அ) வெ. ஸ்ரீராம் ஆ) சங்கர் ஜெயராமன்
இ) இந்திரன் ஈ) ஆ.இரா வேங்கடாசலபதி
விடை: ஆ) சங்கர் ஜெயராமன்

**22. மல்லார்மே-யின் கவிதையைப் பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் ...............**
அ) வெ. ஸ்ரீராம் ஆ) சங்கர் ஜெயராமன்
இ) இந்திரன் ஈ) ஆ.இரா வேங்கடாசலபதி
விடை: அ) வெ.ஸ்ரீராம்

**23. பாப்லோ நெருடா-வின் கவிதையை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் .....................**
அ) வெ. ஸ்ரீராம் ஆ) சங்கர் ஜெயராமன்
இ) இந்திரன் ஈ) ஆ.இரா வேங்கடாசலபதி
விடை: ஈ) ஆ. இரா. வேங்கடாசலபதி

**24. ஆசிரியர் இந்திரனின் இயற்பெயர் ........................**
அ) இராசேந்திரன் ஆ) சு. வில்வரத்தினம்
இ) அ. முத்துலிங்கம் ஈ) ஜீவா
விடை: அ) இராசேந்திரன்

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

**1. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**
**பேச்சுமொழி :-**
- எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சு மொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.
- எழுத்து மொழியில் எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது.
- முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது,
- அதனால்தான், பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

### அகநிலை வினாக்கள்:–

**1. மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை யாது?**
**எழுத்தாளர்கள் செய்யும் கடமை :-**
- கலைகளின் உச்சம் கவிதை
- அக்கவிதையினை, இயன்றவரை பேசுவது போல் எழுதுவது தான் உத்தமம்.
- அதுவே, மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்று மகாகவி பாரதி கூறினார்.

**2. ‘நான்’ எவ்வாறு உதயமானேன்?**
**நான் - உதயமானேன் :-**
- மொழி எனது உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது.
- இதன் பிறகு ‘நான்’ என்ற ஒன்று பிறந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- எனது உலகம் என்பது மொழியினால் கட்டமைக்கப்பட்ட பிறகு, அந்த உலகத்திலிருந்து பிரிந்து 'நான்' உதயமானேன்.

3. **மொழி பிறந்தவுடன் எவ்வெவையெல்லாம் தனித்துவம் பெற்றதாக எர்னஸ்ட் காசிரர் கூறுகிறார்?**

**தனித்துவம் :-**

- மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்கின்றன என்றார் எர்னஸ்ட் காசிரர்.

4. **சொற்களை எவ்வாறு பயன்படுத்தினால் பொருள் வேறுபாடுகள் ஏற்படுகின்றன?**

**பொருள் வேறுபாடுகள் :-**

- உடம்பின் ஒரு பகுதியான தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன.

அவற்றை,

| | |
|---|---|
| * ஏற்றம் | * இறக்கம் |
| * உச்சரிப்பு | * வேகம் |
| * நிதானம் | * திருப்பித் திருப்பிச் சொல்லுதல், |
| * இடையில் கொடுக்கும் மௌனம் | |

ஆகியவற்றிக்கு ஏற்றவாறு பயன்படுத்தினால் பொருள் வேறுபாடுகளை ஏற்படுத்த முடியும்.

5. **மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன யாவை?**

உடம்பின் செயல்பாடுகளான,

- கைகால் அசைவுகள்
- முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள்

ஆகியன மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.

6. **மொழி எப்போது திடநிலையை அடைகிறது?**

**திடநிலை :-**

- நான் விரும்பும் வகையில் ஒரு திரவ நிலையில் இருக்கும் பேச்சுமொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்து விடுகிறது.
- அது அச்சிடப்பட்ட ஒரு கவிதையாக மாறுகிற போது என்னிலிருந்து பிரிந்து போய்விட்ட ஒரு பொருளாக மாறி விடுகிறது.

7. **நேரடி மொழி எனக் கருதுவது யாது?**

**நேரடி மொழி :-**

- பேச்சு என்பது மொழியில் நீந்துவது.
- பேச்சு மொழியில் நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன.
- இதை உணர்ந்த கவிஞர்கள், தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர்.

இதையே 'நேரடிமொழி' எனக் கருதுகின்றனர்.

8. **பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் வெளிப்படும் கவிதையின் உணர்வை உவமை வழி விளக்குக.**

**உவமை :-**

- பேச்சு மொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிற போது அஃது உடம்பின் மேல் தோல் போல இயங்குகிறது.
- ஆனால், எழுத்து மொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடி விடுகின்றன.

9. **குறியீட்டுக் கவிதை என்பது யாது?**

- குறியீட்டுக்கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று.
- நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. **கவிஞனின் கடமை யாது?**

**கவிஞனின் கடமை :-**

➢ ஒரு கவிதையைப் படைப்பதற்கு, எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும், பேச்சு வழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

## III. சிறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. கூற்று –குறியீட்டுக்கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

கவிதை –கூண்டு திறந்தது சிறகடிக்கவா?
இல்லை ! சீட்டெடுக்க.

**கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

கூற்றில் குறியீடு எனக் குறிப்பிட்டதற்கு,

➢ சுதந்திரமாக வானில் சிறகடித்துப் பறக்க முடியாமல் தவிக்கும், சுதந்திரம் பறிக்கப்பட்ட கூண்டுக்கிளியின் அவலநிலை இக்கவிதையில் பொருளாக வந்துள்ளது.

### அகநிலை வினாக்கள்:

1. **இந்திரன் பற்றிச் சிறுகுறிப்பு வரைக:-**

**இந்திரன்:**

➢ இராசேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்டவர். கலை விமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். "பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம்" என்ற மொழிப்பெயர்ப்பு நூலுக்காக, 2011 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் விருது பெற்றுள்ளார். முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள் போன்ற கவிதைத் தொகுப்புகளையும் தமிழ் அழகியல், நவீன ஓவியம் போன்ற கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார். வெளிச்சம், நுண்கலை ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

2. **ஒரு பொருளின் மீது அதிகாரத்தை உருவாக்கியது எது? எவ்வாறு?**

**வாளினும் வலிமை:-**

➢ மொழி வழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின் மீது எனக்கொரு அதிகாரம் வந்து விடுவதை உணர்கிறேன்.

**குழந்தைப் பருவத்தில்:-**

➢ வேலையில் மூழ்கிய அம்மா, நான் அழைத்ததைக் கவனியாத போது திடீரென்று அவளது பெயரைச் சொல்லி அழைத்திருக்கிறேன்.

➢ அப்போது, அம்மா திடுக்கிட்டுத் திரும்பி என்னிடம் வந்திருக்கிறார்.

**மொழி தந்த அதிகாரம்:-**

➢ அப்போது தான், என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை நான் உணர்ந்தேன்.

3. **கவிஞர்கள் 'நேரடி மொழி' எனக் கருதுவது எதனை?** மே -2022

**தனக்குத்தானே பேசிக்கொள்வது:-**

➢ எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது.

➢ எனவே எழுத்து என்பது தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு.

**மொழியில் நீந்துவது:-**

➢ பேச்சு என்பது மொழியில் நீந்துவது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பேச்சு மொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன.

**நேரடி மொழி:-**

- எனவே தான், கவிஞர்கள் சிலர் தங்கள் கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர்.
- இதையே கவிஞர்கள் 'நேரடி மொழி' எனக் கருதுகின்றனர்.

4. **நேரடி மொழி பற்றிய ஆற்றூர் ரவிவர்மாவின் கருத்து யாது?**

**நேரடி மொழி:-**

- நேரடி மொழி எனப்படும் பேச்சு மொழிக்கு ஒருபோதும் பழைமை தட்டுவதில்லை.
- வேற்றுமொழி ஆவதில்லை.
- எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டும் இருக்கிறது.

**காலத்தை நிர்ணயிக்கிறது:-**

- இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் மலையாளக்கவி ஆற்றூர் ரவிவர்மா.

5. **கவிதை என்பது எது? விளக்குக.**

**படைப்புச் செயல்பாடு:-**

- கவிதை என்பது ஒரு பொருளன்று.
- அது மொழிக்குள் உலகையும், உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் ஒரு படைப்புச் செயல்பாடு.

**உலகத்தைக் கட்டியெழுப்புவது:-**

- கவிதை என்பதே மொழி தான்.
- கவிதைக்குள் உலவும் மொழியின் தர்க்கம் கவிதைக்கான உலகத்தைக் கட்டியெழுப்புகிறது.

**கவிஞனின் கடமை:-**

- எனவே, எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும் பேச்சு வழக்குகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

## IV. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.** மார்ச்-2020 மே-2022

**முன்னுரை:-**

- "பேசுவது போல் எழுதுவது தான் உத்தமம்"
  அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்று கூறியிருக்கிறார் மகாகவி பாரதி
- எழுத்து மொழியைக் கடந்து பேச்சு மொழி எவ்வாறு நம்மிடம் நெருக்கமாக இருக்கிறது என்பவை பற்றிப் பேசுகிறது இக்கட்டுரை.

**எனது விழியைத் திறந்து உலகைக் காட்டியது:-**

- நான் இதுவரைக் கேட்டது, கண்டது, படித்தது ஆகிய எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப்பார்த்தால், நான் மொழியில் மிதந்து கொண்டு தான் பிறந்ததாகத் தெரிகிறது.
- மொழியில் மூழ்கியபடி தான் எனது விழிகள் இந்த உலகைக் காணத் திறந்தன என்று உணர்கிறேன்.

**அதிகாரத்தை உருவாக்கும் மொழி:-**

- என்னுடைய மொழி வழியாக, ஒன்றைப் பெயரிட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது ஒரு அதிகாரத்தை எனக்கு உருவாக்கிக் கொடுத்ததை நான் உணர்ந்தேன்.

**உணர்ச்சி வெளிப்பாடுகள்:-**

- 'உடம்பின் ஒரு பகுதியான தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அவற்றை,

* ஏற்றம் * இறக்கம்
* உச்சரிப்பு * வேகம்
* நிதானம் * திருப்பித் திருப்பிச் சொல்லுதல்
* இடையில் கொடுக்கும் மௌனம்

ஆகியவற்றிக்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும்.

**உடம்பின் செயல்பாடுகள்:-**

➢ கைகால் அசைவுகள்
➢ முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள்

ஆகிய உடம்பின் செயல்பாடுகள் என்னுடைய பேச்சு மொழியைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

**என்னிடம் கீழ்ப்படிந்து நடக்கும் மொழி:-**

➢ ஒரு திரவநிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்து விடுகிறது.
➢ இந்தத் திடநிலையை அடைந்த மொழி அச்சிடப்பட்டு எழுத்து மொழியாக மாறுகிறபோது என்னிலிருந்து பிரிந்து போய்விட்ட ஒரு பொருளாக மாறி விடுகிறது.

**உணர்ச்சிக்கு மிக அருகில் உள்ள மொழி:-**

➢ எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.
➢ எனவேதான், இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சு மொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதை மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

**முடிவுரை:-**

➢ பேச்சு மொழியானது உடம்பின் மேல் தோல் போல் இயங்குகிறது.
➢ ஆனால் எழுத்து மொழியானது உணர்ச்சியற்ற ஆடை போல் போர்த்தி மூடி விடுகின்றன.
➢ எனவே, நான் மொழியை வெளிப்படுத்தும் நிலையில், எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சு மொழியினை எளிமையாக உணர்கிறேன்.

## அகநிலை வினாக்கள்:–

**1. உலகத்தை எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாற்றியது எது? எவ்வாறு?**

**முன்னுரை:-**

எனக்கு மொழி என்பது அறிமுகமாவதற்கு முன்னால் பொருள்களும், விலங்கு, பறவை, மரம், செடி, வான், நிலவு, சூரியன் போன்றவைகளும் இருந்திருக்கவே இல்லை,

**'நான்' உதயமானேன்:-**

➢ மொழி எனது உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது,
➢ எனது உலகம் என்பது மொழியினால் கட்டமைக்கப்பட்ட பிறகு உலகத்திலிருந்து தனித்துப் பிரிந்து 'நான்' உதயமானேன்.

**எர்னஸ்ட் காசிரரின் கூற்று:-**

➢ மொழி என்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன என்கிறார் எர்னஸ்ட் காசிரர்.

**உலகத்தை உணர்த்தியது:-**

எனது உலகத்தை இழையிழையாகப் பிரித்தும், வகுத்தும், தொகுத்தும், விதவிதமான தூரங்களில் வைத்தும் கொடுத்தது மொழி.

**பெயர் சூட்டினேன்:-**

மொழியை உணர்ந்த பின்பு தான், உலகில் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பலவற்றை நானே என் கண்களால் கண்டுபிடித்து அவற்றிற்குப் பெயர் சூட்டத் தொடங்கினேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**காலம், எண் முக்கியத்துவத்தை உணர்த்தியது:-**

- பெயர்களுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி எனக்குக் கொடுத்தது.
- அவற்றை, ஒருமையாகவும் பன்மையாகவும் அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அடுக்கும் திறனை மொழி எனக்கு வழங்கியது.

**முடிவுரை:-** இவ்வாறு 'மொழி' என்ற ஒன்று என்னுள் தோன்றியவுடன் தான் 'உலகம்' எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது.

---

2. **எழுத்து மொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டு சக்தி மிக்கது எது? விளக்குக.**

**முன்னுரை:-**

- எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது,
- எனவே தான் இலக்கிய வழக்கைக் கைவிட்டு விட்டுப் பேச்சு மொழிக்குத் திரும்பியவுடனே கவிதை மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறி விடுகிறது,

**உணர்ச்சியை வெளிப்படுத்தும் பேச்சுமொழி:-**

- எழுத்து மொழியில் எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது.
- முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிக்கிறது.

**தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு:-**

- எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிராளி கிடையாது.
- எழுத்து என்பது தனக்குத் தானே பேசிக் கொள்கிற பேச்சு.

**மொழியில் நீந்துவது பேச்சு மொழி:-**

- பேச்சு என்பது தன்னைத் திறந்து கொள்கிற செயல்பாடு. பேச்சு என்பது மொழியில் நீந்துவது.
- பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன.
- இதனால் தான், கவிஞர்கள் சிலர் தங்கள் கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர்.

**உவமைகள் உணர்த்தும் உணர்ச்சிகள்:-**

- பேச்சு மொழியில் கவிதை செய்யப்படுகிறபோது அது "உடம்பின்மேல் தோல் போல்" இயங்குகிறது.
- எழுத்து மொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, "உணர்ச்சியற்ற ஆடைபோல்" போர்த்தி மூடிவிடுகின்றன.

**முடிவுரை:-**

இவ்வாறாக, பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது என்பதைத் தெளிவாக உணரலாம்.

---

3. **கவிதை பற்றிய பெருங்கவிஞர்களின் வாய் மொழியை விளக்குக. (அல்லது)**
**பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களை வகைப்படுத்தி விளக்குக.**

**முன்னுரை:-**

பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உண்டு.

- வால்ட் விட்மனைப் போன்றவர்கள் முதல் வகையினர்.
- கவிஞர் மல்லார்மே போன்றவர்கள் இரண்டாம் வகையினர்.
- பாப்லோ நெரூடா போன்றவர்கள் மூன்றாம் வகையினர்.

**(i) வால்ட் விட்மன்:-**

**சொற்களுக்கு முக்கியம் கொடுத்தல்:-**

- முதல் வகையினரின் கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கியமானதாகி விடுவதில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- எழுத்துகள் சொற்களில் கரைந்து போவதைப் போன்று, சொற்கள் கவிதைகளில் கரைந்து போவதில்லை.
- சொற்கள் தங்களுக்குத் தாங்களே பேசிக்கொள்வதில்லை.

**தளர்வோடு கட்டப்பட்ட கவிதைகள்:-**

- இக்கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச்சுருளைப் போன்று அல்லாமல் பேச்சு மொழிக்கே உரிய தளர்வோடு கட்டப்பட்டவை.

**பேச்சு நிலைக்கு நழுவுதல்:-**

- நடனமாடிக் கொண்டிருப்பவன், அவ்வப்போது நடப்பதற்குத் தாவி விடுவது போல் வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு இக்கவிதைகள் நழுவி விடும்.

"மக்கள் தோற்றத்திலும் அன்பே,
அன்பேதான் அவர் மொழியும்"
– வால்ட் விட்மன்.

**(ii) கவிஞர் மல்லார்மே:-** **ஆகஸ்ட்-2022**

**தங்களுக்குத் தாங்களே பேசிக்கொள்ளுதல்:-**

- இரண்டாம் வகையினரின் கவிதைகள், எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று.
- வெளியில் பரந்து கிடக்கும் தனிமையைச் சாட்சியாக வைத்துத் தங்களுக்குத் தாங்களே உதடு பிரித்துப் பேசிக் கொள்ளும் வகை ஆகும்.
- தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்கிறது.

**வெளியில் புழங்குகின்றவை:-**

- குறியீடுகளின் கூட்டம் ஒரு முனையிலும் மொழி மறு முனையிலும் இருக்கையில் கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில் புழங்குகின்றது.

**குறியீட்டுக் கவிதை:-**

- குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

"நான் தப்பிப் போகத்தான் வேண்டும் அங்கே,
ஆனால் உடலோ சோகத்தில் ! வானுக்கும்
முன்பின் தெரியாத கடல் நுரைக்குமிடையே"
– ஸ்டெஃபான் மல்லார்மே.

**(iii) பாப்லோ நெரூடா:-**

**வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுதல்:-**

- மூன்றாவது வகையினரின் கவிதைகள், ஒரு பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அது அப்பொருளைப் பற்றியது அன்று.
- அது வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப்பற்றிப் பேசுகிறது.

**எதையும் சுட்டாமல் முடிந்து போதல்:-**

- எந்தவித முன்கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவது போலக் காட்டி உடனே எதையும் சுட்டாமல் முடிந்து போகிறது.

**நெரூடாவின் கவிதை:-**

- அறியப்பட்டிராததை நோக்கி நகர்கிற அதே நேரத்தில் நெரூடாவின் கவிதை விரிந்ததாகவும் மையத்தை நோக்கி நகர்வதாகவும் இருக்கிறது.

"இரவில் நான் உறங்குகையில்
என்னை என்னவென்று அழைக்கின்றனர்
அல்லது என்னவென்று அழைப்பதில்லை?
தூங்கும் போது நான் நானாக இல்லையெனில்
விழித்தெழுந்த பின் நான் யார்?"
– பாப்லோ நெரூடா.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



மனிதம் / ஆளுமை

இயல்: 8

# யாரையும் மதித்து வாழ்

உரைநடை உலகம் : தாகூரின் கடிதங்கள்
கவிதைப்பேழை : ஒவ்வொரு புல்லையும் தொலைந்து போனவர்கள் மனோன்மணீயம்
விரிவானம் : செவ்வி
இனிக்கும் இலக்கணம் : மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்
வாழ்வியல் : திருக்குறள்

## உரைநடை : தாகூரின் கடிதங்கள்

### நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக:

#### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **பூஜை, விஷயம், உபயோகம், என்பவை முறையே ....... எனறு தமிழில் வழங்கப்படும்.**
அ)வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ)வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
விடை : அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு

#### அகநிலை வினாக்கள்:–

1. **கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்க தரிசி .....**
அ)இன்குலாப் ஆ) தாகூர் இ) பெ.சுந்தரனார் விடை : ஆ) தாகூர்

2. **தாகூர் 1913 இல் கீதாஞ்சலி என்ற கவிதை நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்காக __________ பெற்றார்.**
அ)நோபல் பரிசு ஆ) தேசிய விருது இ) சாகித்திய விருது விடை : அ) நோபல் பரிசு

3. **1919 ல் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையால், ஆங்கிலேய அரசைக் கண்டித்து __________ பட்டத்தைத் துறந்தார்.**
அ)பத்மபூஷண் ஆ) பத்ம ஸ்ரீ இ) சர் விடை : இ) சர்

4. **1921ல் __________ பல்கலைக்கழகத்தை நிறுவினார்.**
அ)விஸ்வபாரதி ஆ) மனோன்மணீயம் சுந்தரனார்
இ) பாரதிதாசன் விடை : அ) விஸ்வபாரதி

5. **'குருதேவ்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுபவர்.**
அ)பெ.சுந்தரனார் ஆ) நேதாஜி இ) தாகூர் விடை : இ) தாகூர்

6. **தாகூரின் "ஜன கண மன" என்னும் பாடல் __________ தேசத்தின் நாட்டுப்பண்ணாக உள்ளது.**
அ) இந்தியா ஆ) இலங்கை இ) வங்காளம் விடை : அ) இந்தியா

7. **தாகூரின் "அமர் சோனார்பங்களா" என்னும் பாடல் __________ தேசத்தின் நாட்டுப்பண்ணாக உள்ளது.**
அ)இந்தியா ஆ) இலங்கை இ) வங்காளம் விடை : இ) வங்காளம்

8. **'தாகூரின் கடிதங்கள் ' என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் __________.**
அ)த.ந.குமாரசுவாமி ஆ) சுப்பிரமணிய சுவாமி இ) நாராயணசுவாமி
விடை : அ) த.ந.குமாரசுவாமி



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9. **வங்க அரசு, தமிழ் - வங்க மொழிகளுக்குத் தாகூர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி ________ அளித்துச் சிறப்பித்துள்ளது.**
அ)கலை இலக்கிய விருது ஆ) இலக்கியப்பண்பாட்டு விருது
இ)நேதாஜி இலக்கிய விருது **விடை : இ) நேதாஜி இலக்கிய விருது**

10. **'ஜாதீ' என்பது ________ வகையில் ஒரு பூ**
அ)ரோஜா ஆ) மல்லிகை இ) முல்லை **விடை : இ) முல்லை**

11. **சாந்திநிகேதனில் உள்ள சமஸ்கிருத காவியங்களில் புகழ்பெற்ற ஒரு மரத்தின் பெயர்.** **மார்ச்-2020**
அ)பியால ஆ) சந்தனம் இ) வேங்கை **விடை : அ) பியால**

12. **'மயூராவுி' என்பதன் பொருள் ________**
அ)புறாக்கண்ணி ஆ) மயில் விழியாள் இ) விருப்புடையவள்
**விடை : ஆ) மயில் விழியாள்**

13. **பௌ - கதா - கவோ என்ற சொற்களைப் போல் குரல் பயிற்றும் ஒரு பறவை இனம் ________**
அ)மயில் ஆ) குயில் இ) புறா **விடை : இ) புறா**

14. **கிழக்கு வங்காளத்தின் பெரிய நதியின் பெயர் ________**
அ)யமுனை ஆ) பத்மா இ) கோதாவரி **விடை : ஆ) பத்மா**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**
**நாட்டுப்புறம் :** **மார்ச்-2023**
நாட்டுப்புறங்களில் இருக்கும்போது எல்லாவற்றையும் விழுங்கவல்ல மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.
**பட்டணம் :**
- பட்டணத்தில் மனித சமுதாயம் தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது.
- தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவது கூட இல்லை

2. **பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16 ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் - (நிறுத்தக்குறியிடுக.)**
'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தம் 16 ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

### அகநிலை வினாக்கள்:–

1. **தாகூர், விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவக் காரணம் யாது?**
**விஸ்வபாரதி**
- குழந்தைகள் இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்பட வேண்டும்.
- தங்கள் வேலையைத் தாங்களே கவனித்துக் கொண்டு மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1921 இல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **தாகூரின் ஆளுமையின் பேருருவை எவ்வாறு அறிய முடியும்?**
**ஆளுமையின் பேருரு :**
- இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசைப்பாடல்கள்
- ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள்
- இருபது பெரு நாடகங்கள்
- குறு நாடகங்கள்
- எட்டு நாவல்கள்
- எட்டுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகள்
- ஓவியப் படைப்புகள்
- பயணக் கட்டுரைகள்
- ஆங்கில மொழிபெயர்ப்புகள்

ஆகியவற்றை இணைத்துக் கொண்டால் தாகூரின் ஆளுமையின் பேருருவை அறிய முடியும்.

3. **தாகூரின் கடிதங்கள் எவற்றையெல்லாம் உள்ளடக்கியுள்ளன?**
**தாகூரின் கடிதங்கள் :**
கவித்துவ இயல்பு கொண்ட தாகூரின் கடிதங்கள்
➢ கற்பனை ➢ நகைச்சுவை ➢ ஆழ்ந்த சிந்தனை
ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

4. **கடித இலக்கியத்தின் காலத்தொன்மையை நாம் எவ்வாறு அறியலாம்?**
**காலத் தொன்மை :**
உரைநடைகளில் மட்டுமின்றிக் காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கூட கடித இலக்கியம் காணப்படுவது அதன் காலத்தொன்மையை விளக்குகிறது.

5. **தாகூருக்கு, பாரத நாட்டின் இயல்பு எப்போது தலைதூக்குகிறது?**
**பாரத நாட்டின் இயல்பு :**
நாட்டுப்புறங்களில் இயற்கையோடு ஒன்றி உடனுக்குடன் இணைந்து பழகும் போது தாகூரின் உள்ளத்தினுள் பாரத நாட்டின் இயல்பு தலைதூக்குகிறது என்கிறார்.

## III. சிறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **தாமஸிகம் என்றால் என்ன?**
**தாமஸிகம் :**
- சீக்கிரமே வாடிடும் மலர்களைப் பராமரிக்கும் பொறுப்பு தோட்டக் காரனுடைய கைகளில் இருக்கும்.
- மலர்ச் செப்பினுள் வழக்கம் போல் போவதும் வருவதும் தான் அவற்றின் வேலை.
- இதைத் தான் 'தாமஸிகம்' அதாவது 'மெடீரியலிஸம்' என்கின்றோம்.

### அகநிலை வினாக்கள்:–

1. **கடித இலக்கியம் பற்றிக் குறிப்பு வரைக.**
**கடித இலக்கயம் :**
- செய்தியை உரியவருக்குத் தெரிவிப்பதற்காக எழுதி அனுப்பப்படுவது கடிதமாகும்.
- அதுவே, உரிய வடிவுடன் பொருட்செறிவாலும் கற்பனை நயத்தாலும் மொழிவறத்தாலும் கடித இலக்கியமாக உருப்பெறுகின்றது.
- உரைநடையில் மட்டுமன்றிக் காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கூடக் கடித இலக்கியம் காணப்படுவது அதன் காலத் தொன்மையை விளக்குகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **தாகூர் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

**தாகூர் :**

- 'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீனமனிதர்' என்றும், 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தம் 16ம் வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கினார்.
- 1913 இல் கீதாஞ்சலி என்ற கவிதை நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்காக நோபல்பரிசு பெற்றார். 1919 இல் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையால் ஆங்கில அரசைக் கண்டித்து 'சர்' பட்டத்தைத் துறந்தார். இசைப்பாடல்கள், கவிதைகள், நாடகங்கள் என பல்வேறு வழிவங்களிலும் நூல்களை எழுதியுள்ளார். 1921 இல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினர். தமிழ் - வங்க மொழிக்கு இவர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி 'நேதாஜி இலக்கிய விருது' அளிக்கப்பட்டது. தாகூரின் 'ஜனகணமன' என்னும் பாடல் இந்தியாவின் நாட்டுப்பண்ணாகவும் 'அமர் சோனார் பங்களா' என்னும் பாடல் வங்காளத்தின் நாட்டுப்பண்ணாகவும் இன்றும் பாடப்பட்டு வருகிறது.

## IV. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:-

1. **சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.**

**வெள்ளப்பெருக்கு :**

ஆறு கரை தளும்ப நிரம்பி இருக்கிறது. எதிர்கரையே தென்படவில்லை. சுழல்களாகப் பொங்கும் வெள்ளத்தை, அடக்கிச் சமமாகப் பரவச் செய்தவாறு ஓடுகிறது.

**சாவின் வரலாறு :**

இறந்து போன ஒரு சின்னஞ்சிறு பறவை ஆற்று வெள்ளத்தில் மிதந்து வருவதைக் கண்டேன். எங்கேயோ ஒரு மாமரக் கிளையில் அதன் கூடு இருந்தது. இருட்டும் வேளையில் அதன் கூட்டுக்குத் திரும்பித் தன் துணையுடன் மிருதுவான வெம்மையில் உடல் சோர்ந்து உறங்கியது. திடீரென்று இரவில் கிழக்கு வங்காளத்தின் பெரிய நதியான பத்மாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கூட்டை விட்டுச் சிதறிவிழுந்த பறவை ஒரு கணம் கண் விழித்தது. அதன் பிறகு கண் விழிக்க வேண்டிய அவசியமே அதற்கு இல்லாமல் போய்விட்டது.

**நாட்டுப்புறம் :**

நாட்டுப்புறங்களில் இருக்கும் போது மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.

**பட்டணம் :**

பட்டணத்திலோ மனித சமுதாயம் தான் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவது கூட இல்லை.

**பாரத நாட்டினர் :**

ஐரோப்பாவில் மனிதனுக்குத் தான் முக்கியமான இடம். ஆனால் பாரத நாட்டினர். மனிதன் விலங்காக மாறுவதையோ, விலங்கு மனிதனாக மாறுவதையோ பற்றி எதுவும் தவறுதலாக எண்ணுவது இல்லை.

**பாரத நாட்டின் இயல்பு :**

- நாட்டுப்புறங்களில் இயற்கையோடு ஒன்றி உடனுக்குடன் இணைந்து பழகும் போது தாகூரின் உள்ளத்தினுள் பாரத நாட்டின் இயல்பு தலைதூக்குகிறது. என்கிறார்.
- ஒரு பறவையின் சின்னஞ்சிறு இதயத்தினுள்ளும் வாழ்க்கையின் களிப்பு எத்துணை அதிகமாக இருக்கும் என்பது பற்றிச் சிந்திக்கிறார் தாகூர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செய்யுள் : ஒவ்வொரு புல்லையும் - இன்குலாப்

## சொல்லும் பொருளும்

1. தோழமை - நட்பு
2. சமத்துவம் - அனைவரும் சமம்
3. விசும்பல் - ஒரு கேவல் / அழுகை பொங்கி வரும் போது கேட்கும் ஒலி.
4. எதிரொலி - மீண்டும் மீண்டும் கேட்கும் ஒலியின் தோற்றப்பாடு
5. மானுடம் - மானிட சாதி.

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக:

#### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம் பெற்ற மரபு ______.**
அ)பெயர் மரபு ஆ) வினை மரபு இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்
விடை : இ) ஒலி மரபு

#### அகநிலை வினாக்கள்:–

1. **சாகுல் அமீது என்னும் இயற்பெயருடையவர் ______**
அ) அப்துல் ரகுமான் ஆ) இன்குலாப் இ) பிரமிள் விடை : ஆ) இன்குலாப்

2. **'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்ற கவிதைத் தொகுப்பை எழுதியவர் ______**
அ) இன்குலாப் ஆ) பெ.சுந்தரனார் இ) தாகூர் விடை : அ) இன்குலாப்

3. **'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடியவர் ______**
அ) இன்குலாப் ஆ) தாகூர் இ) பாரதியார் விடை : இ) பாரதியார்

4. **"கூவும் குயிலும் கரையும் காகமும்
விரியும் எனது கிளைகளில் அடையும்" என்று பாடியவர் ______**
அ) இன்குலாப் ஆ) பாரதியார் இ) பெ.சுந்தரனார் விடை : அ) இன்குலாப்

### II. குறுவினா

#### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **"நீளும் கைகளில் தோழமை தொடரும்
நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" - தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

**மோனைத் தொடை :**

**அ) அடி மோனை :**

செய்யுளில் அடிகளில் வரும் முதல் எழுத்து ஒன்றி வருவது அடிமோனை ஆகும்.
எ.கா நீளும் - நீளாத



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**எதுகைத் தொடை :**

**அ) அடி எதுகை**

செய்யுளின் அடிகளில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை ஆகும்.

எ.கா நீளும் - நீளாத

**இயைபுத் தொடை :**

செய்யுளின் அடிகளில் கடைசி எழுத்தோ, அசையோ, சீரோ இயைபாகப் பெற்று வருவது இயைபுத் தொடையாகும்.

(எ.கா) தொடரும் - படரும்

**முரண் தொடை :**

செய்யுளின் எதிர்ச்சொற்களைப் பெற்று வருவது முரண்தொடை ஆகும்.

(எ.கா) நீளும் × நீளாத

## அகநிலை வினாக்கள்

1. **இன்குலாப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**
சாகுல் அமீது என்னும் இயற்பெயருடைய இன்குலாப் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு என இலக்கியத்தில் விரிவான, தளங்களில் இயங்கியவர். அவருடைய கவிதைகள் 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்ற பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மரணத்துக்குப் பிறகு அவருடைய உடல், அவர் விரும்பியபடி செங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்குக் கொடையளிக்கப்பட்டது.

2. **எவற்றையெல்லாம் பெயர் சொல்லி அழைப்பதாகக் கவிஞர் இன்குலாப் கூறுகிறார்?**
★ ஒவ்வொரு புல்லையும் ★ கல்லையும் ★ மண்ணையும்
- பெயர் சொல்லி அழைப்பேன் என்று கவிஞர் இன்குலாப் கூறுகிறார்.

3. **சமத்துவப்புனலில் எவை கரையும் எனக் கவிஞர் இன்குலாப் கூறுகிறார்?**
**சமத்துவப் புனல் :** புத்தம், கிறித்துவம், இசுலாம் என்று பிரியும் மதங்களின் பாகுபாடுகள் அனைத்தும் சமத்துவம் என்ற நீரில் கரைந்து மனிதம் ஆகின்றன என்கிறார் கவிஞர் இன்குலாப்.

## III. சிறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **இன்குலாப், ''உலகுக்கு வேண்டும் நானும் ஒரு துளியாய்'' எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.** மார்ச்-2020

➢ ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைத்து, கல்லையும் மண்ணையும் விளித்து, இயற்கையின் வளங்களில் நீண்டு செல்லும் வழிகளெங்கும் நட்புகள் தொடர்கின்றன.

➢ நெஞ்சைத் தொடும் இயற்கையைக் களிப்புடன் கடந்து செல்கிறார்.

➢ பரந்து விரிந்திருக்கும் இந்த உலகமானது இவர் அனைத்தையும் இரசிப்பதற்கு வசமாய் ஓர் கடலாக வேண்டும் என்கிறார்.

➢ அத்தகைய பெரிய உலகான கடலில் நானும் ஓர் துளியாக இருக்க வேண்டும் என விரும்புகிறார்.

➢ உலகத்தைக் கடலாக்கி விட்டு. அந்தக் கடலின் ஒரு துளி நான் என்கிறார். இன்னும் காணாத காட்சிகள், தொடராத நட்புகள் இவ்வுலகில் உண்டு என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IV. இலக்கணக் குறிப்பு தருக

### அகநிலை வினாக்கள்:–

1. சொல்லி - வினையெச்சம்
2. தெரிந்த - பெயரெச்சம்
3. தெரியாத, நீளாத - எதிர்மறைப் பெயரெச்சம்
4. கல்லையும் மண்ணையும் - எண்ணும்மை
5. நிழலும் சிலுவையும் பிறையும் - எண்ணும்மை
6. என் செவி - ஆறாம் வேற்றுமைத் தொகை
7. விழிப்பேன் - தன்மை ஒருமை வினைமுற்று
8. இசைப்பேன் - தன்மை ஒருமை வினைமுற்று
9. அழைப்பேன் - தன்மை ஒருமை வினைமுற்று
10. விளிப்பேன் - தன்மை ஒருமை வினைமுற்று

## V. பகுபத உறுப்பிலக்கணம் தருக

### அகநிலை வினாக்கள்:–

**1. அழைப்பேன் - அழை + ப் + ப் +ஏன்**

அழை - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
(இதைப்போன்றே விளிப்பேன் - விளி + ப் + ப் + ஏன்
விழிப்பேன் - விழி + ப் + ப் + ஏன்
இசைப்பேன் - இசை + ப் + ப் + ஏன் என்ற பகுபத உறுப்புகளைப் பெற்றுவரும்)

**2. தெரிந்த - தெரி + த்(ந்) + த் + அ**

தெரி - பகுதி
த் - சந்தி, 'த்' - 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

## VI. புணர்ச்சி விதி தருக

### அகநிலை வினாக்கள்:–

**1. சுவரில்லாத - சுவர் + இல்லாத**

(i) "உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"
- என்ற விதிப்படி

ர் + இ + ரி ஆனது
= சுவரில்லாத
= என்று புணர்ந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **சமத்துவப் புனல் - சமத்துவம் + புனல்**

(i) 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்'

→ என்ற விதிப்படி,

ம் - நீங்கியது

சமத்துவ + புனல்

(ii) "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்"

→ என்ற விதிப்படி

ப் - மிகுந்தது

= சமத்துவப்புனல்

= என்று புணர்ந்தது.

---

## செய்யுள்: தொலைந்து போனவர்கள்

- அப்துல் ரகுமான்

**சொல்லும் பொருளும்:-**

1. விடிந்தது → பொழுது புலர்ந்தது
2. முடிந்தது → எண்ணிய செயல் முற்றுபெறுதல்
3. அளித்தேன் → பிறருக்குக் கொடுத்தேன்

## I. பலவுள் தெரிக:

**அகநிலை வினாக்கள்:-**

1. **கற்றேன் என்பாய் கற்றாயா? - வெறும் காகிதம் தின்பது கல்வியில்லை - இவ்வடிகளில் பயின்று வருவது**

அ) அடி எதுகை, அடி மோனை ஆ) சீர் மோனை, அடி எதுகை

இ) அடி மோனை, அடி இயைபு ஈ) சீர் மோனை, அடி மோனை

விடை : ஈ) சீர் மோனை, அடி மோனை

2. **மானுட சமுதாயத்தின் விழிகள் ஒளியிழந்து கிடப்பதைத் தம் கவிதையால் உணர்த்தும் கவிஞர் ________.**

அ) பிரமிள் ஆ) அப்துல்ரகுமான் இ) வில்லிபுத்தூரார்

விடை : ஆ) அப்துல்ரகுமான்

3. **வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவர்**

அ)அப்துல்ரகுமான் ஆ) வில்லிபுத்தூரார் இ) கம்பர் விடை : அ) அப்துல்ரகுமான்

4. **தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது பெற்றவர்**

அ)சுரதா ஆ) வாணிதாசன் இ) அப்துல்ரகுமான்

விடை : இ)அப்துல்ரகுமான்

5. **சாகித்திய அகாதெமி விருது பெற்ற அப்துல் ரகுமானின் கவிதைத் தொகுப்பு ________.**

அ)சுட்டுவிரல் ஆ) பால்வீதி இ) ஆலாபனை விடை : இ) ஆலாபனை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **நும் பாடப்பகுதி இடம்பெற்றுள்ள அப்துல் ரகுமானின் கவிதைத் தொகுப்பு _______.**
அ)சுட்டுவிரல் ஆ) நேயர் விருப்பம் இ) பித்தன் **விடை : அ) சுட்டுவிரல்**

7. **வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசியராகப் பணியாற்றியவர் _______.**
அ)சுரதா ஆ) அப்துல்ரகுமான் இ) தருமு சிவராம்
**விடை : ஆ) அப்துல்ரகுமான்**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **“கற்றேன் என்பாய் கற்றாயா?” என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?**
கற்றேன் என்பாய் கற்றாயா?
– என்று அப்துல்ரகுமான் மக்களிடம் கேட்கிறார்.
**காரணம்:**
➢ வெறும் மனப்பாடம் செய்து ஏட்டுக்கல்வியைப் பெறுவது மட்டும் கல்வி கிடையாது.
➢ ஒரு பொருளைப் பற்றி ஐயமற தெளிவாக உணர்ந்து அவற்றை நடைமுறை வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பதே ‘கற்றேன்’ என்பதாகும்.

### அகநிலை வினாக்கள்:–

1. **தொலைந்து போனவர்கள் கவிதைலிருந்து மூலம் அப்துல்ரகுமான் உணர்த்துவது யாது?**
➢ மானுட சமுதாயத்தின் விழிகள் ஒளியிழந்து கிடப்பதைத் தம் கவிதையால் உணர்த்துகிறார்.
➢ நடக்காததை நடந்ததாகக் கருதிக் கொண்டு மாயையில் வாழும் மக்கள், ஒளியில் உண்மையைத் தேடும் தத்துவத்தை உணர்த்துகிறார்.

2. **அப்துல் ரகுமான் எவற்றிற்கு ஒளியூட்ட விழைகிறார்?**
மானுட சமுதாயத்தில் ஒளியிழந்து கிடக்கும் விழிகளுக்கு ஒளியூட்ட விழைகிறார்.

## III. சிறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **அப்துல்ரகுமானின் கவிதையிலிருந்து வினா-விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.**
**வினா விடை வடிவம்:**
“கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்
காகிதம் தின்பது கல்வியில்லை
பெற்றேன் என்பாய் எதைப் பெற்றாய்? – வெறும்
பிள்ளைகள் பெறுவது பெறுவதல்ல”
– வெறும் ஏட்டுக்கல்வி மட்டுமே கல்வியல்ல, பிள்ளைகளைப் பெறுவது மட்டுமே பெறுதல் அல்ல என்பதை வினா-விடை வடிவில் அப்துல்ரகுமான் விளக்குகிறார்.
**காரணம்:**
➢ வெறும் மனப்பாடம் செய்து ஏட்டுக்கல்வியைப் பெறுவது மட்டும் கல்வி கிடையாது.
➢ ஒரு பொருளைப் பற்றி ஐயமற தெளிவாக உணர்ந்து அவற்றை நடைமுறை வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பதே ‘கற்றேன்’ என்பதாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**பெற்றேன்:**

- பிள்ளைகளைப் பெறுவது மட்டுமே பெறுதல் இல்லை.
- உலக நடைமுறையோடு ஒத்து வாழும் நல்ல குணங்களைப் பெறுவது தான் 'பெற்றேன்' என்பதாகும்.

## IV. நெடுவினா

### அகநிலை வினாக்கள்:–

**1. எவற்றையெல்லாம் மாயை என்று கவிக்கோ கருதுகிறார்? மாயையிலிருந்து விடுபட அவர் கூறும் வழிமுறையை ஆராய்க.**

**மாயை:**

- வானம் விடிவது மக்கள் வாழ்க்கையின் விடிவல்ல.
- முடிதல் என்பதே இல்லாத போது, ஒரு காரியத்தை முடித்தல் என்பது நம் வாழ்க்கைக்கு அல்ல.
- வெறும் ஏட்டுக் கல்வி பயிலல் மட்டுமே கல்வியல்ல. ஐயமறக் கற்று, கற்றதை வாழ்வில் கடைப்பிடிப்பதுமே கல்வி.
- வெறும் பிள்ளைகளைப் பெறுவது மட்டுமே பெறுதல் அல்ல. நம் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல குணங்களைப் பெறுவதே ஆகும்.
- நம் வாழ்விற்குத் தேவையற்ற மன அழுக்குகள் நீங்கவில்லையெனில் குளித்தல் என்பது நடைபெறவே இல்லை.
- நமக்கென்றே ஒன்றுமில்லை. ஆகையால் பிறர்க்கு நாம் அளித்தல் என்பதும் உண்மை இல்லை.
- வெறும் உடலை மறைப்பது மட்டுமே நம் வாழ்விற்கான ஆடை அல்ல.
- நாம் வினாவாகவே இருக்கும் போது, விடை எவ்வாறு கூற முடியும்.
- நம் பசிக்கு நாமே இரையாவதைத் தின்றேன் என எவ்வாறு கூற முடியும்.
- தான் பெறும் வெற்றியில் தன் வாழ்க்கையைத் தோற்கின்றனர்.
- 'நான்' என்பதிலும் நாமில்லை, 'ஏன்?' என்பதிலும் கேள்வியில்லை.

**விடுபடுவதற்காக வழிமுறைகள்:**

நடக்காததை நடந்ததாகக் கருதிக் கொண்டு மாயையில் வாழும் மக்கள், 'ஏன்' என்னும் ஒளியில் தேடினால் ஒவ்வொரு மாயையிலும் நாம் தொலைத்த வாழ்க்கையைக் கண்டடையலாம் என்கிறார் கவிஞர் அப்துல்ரகுமான்.

## V. இலக்கணக் குறிப்பு தருக

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. கற்றேன் - தன்மை ஒருமை வினைமுற்று
2. உடை அணிந்தேன் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
3. உரைத்தாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று

### அகநிலை வினாக்கள்:–

1. யுகயுகமாய் - அடுக்குத்தொடர்
2. அணுஅணுவாய் - அடுக்குத்தொடர்
3. தோற்கின்றார் - வினையாலணையும் பெயர்
4. நிற்கின்றாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VI. பகுபத உருப்பிலக்கணம் தருக

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **வென்றேன் - வெல்(ன்) + ற் + ஏன்**
   வெல் - பகுதி (ல், ன் எனத் திரிந்தது விகாரம்)
   ற் - இறந்தகால இடைநிலை
   ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

2. **நிற்கின்றாய் - நில்(ற்) + கின்று + ஆய்**
   நில் - பகுதி (ல், ற் எனத் திரிந்தது விகாரம்)
   கின்று - நிகழ்கால இடைநிலை
   ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

3. **பெற்றேன் - பெறு(பெற்று) + ஏன்**
   பெறு - பகுதி (பெற்று என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது)
   ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

4. **அணிந்தேன் - அணி+த்(ந்)+த்+ஏன்** மார்ச்-2020
   அணி - பகுதி
   த் - சந்தி (த், 'ந்' எனத் திரிந்தது விகாரம்)
   த் - இறந்தகால இடைநிலை
   ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

### அகநிலை வினாக்கள்:–

1. **கற்றேன் - கல்(ற்) + ற் + ஏன்**
   கல் - பகுதி, 'ல்' - 'ற்' ஆனது விகாரம்.
   ற் - இறந்தகால இடைநிலை
   ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

2. **அளித்தேன் - அளி + த் + த் + ஏன்**
   அளி - பகுதி
   த் - சந்தி
   த் - இறந்தகால இடைநிலை
   ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

3. **கண்டேன் - காண்(கண்) + ட் + ஏன்**
   காண் - பகுதி, காண் - 'கண்' எனக் குறுகியது விகாரம்
   ட் - இறந்தகால இடைநிலை
   ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

4. **தின்றேன் - தின் + ற் + ஏன்**
   தின் - பகுதி
   ற் - இறந்தகால இடைநிலை
   ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VII. புணர்ச்சி விதி தருக

### அகநிலை வினாக்கள்:–

1. **கல்வியில்லை - கல்வி + இல்லை**

i) "இஈஐ வழி யவ்வும்" - என்ற விதிப்படி,
'ய்' - உடம்படு மெய் தோன்றியது.
கல்வி + ய் + இல்லை

ii) "உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" - என்ற விதிப்படி,
ய் + இ - யி ஆனது
= கல்வியில்லை
= என்று புணர்ந்தது.

2. **மனிதரெல்லாம் - மனிதர் + எல்லாம்**

i) "உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" - என்ற விதிப்படி,
ர் + எ = ரெ - ஆனது
= மனிதரெல்லாம்
= என்று புணர்ந்தது.

## செய்யுள் : மனோன்மணீயம் - பேராசிரியர் : பெ. சுந்தரனார்

### சொல்லும் பொருளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கடிநகர் - | காவல் உடைய நகரம் | 10. | பரல் - | கல் |
| | | | 11. | முந்நீர்மடு - | கடலாகிய நீர்நிலை |
| 2. | காண்டி - | காண்க | 12. | அண்டயோனி - | ஞாயிறு |
| 3. | பூம்பராகம் - | பூவில் உள்ள மகரந்தம் | 13. | சாடு - | பாய் |
| | | | 14. | ஈட்டியது - | சேகரித்தது |
| 4. | ஆசு இலா - | குற்றம் இலாத | 15. | எழிலி - | மேகம் |
| 5. | தோட்டி - | துறட்டி | 16. | நாங்கூழ்புழு - | மண்புழு |
| 6. | அயம் - | ஆடு, குதிரை | 17. | பாடு - | உழைப்பு |
| 7. | புக்கவிட்டு - | போகவிட்டு | 18. | ஓவா - | ஒயாத |
| 8. | சீரியதூளி - | நுண்ணிய மணல் | 19. | வேதித்து - | மாற்றி |
| 9. | சிறுகால் - | வாய்க்கால் | | | |

### நம்மை அளப்போம்

## I. பலவுள் தெரிக:

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர் மொழி?**

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

**விடை : இ) நடராசன்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **தமிழின் முதல் பாவடிவ நாடகநூல் .** மார்ச்-2023 ஆகஸ்ட்-2022

அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்

இ) நூல் தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

**விடை : ஆ) மனோன்மணீயம்**

## அகநிலை வினாக்கள்:–

1. **லிட்டன் பிரபு எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலைத் தழுவி, தமிழில் எழுதப்பட்டது.**

அ)வில்லி பாரதம் ஆ) மனோன்மணீயம் இ) ஒவ்வொரு புல்லையும்

**விடை : ஆ) மனோன்மணீயம்**

2. **மனோன்மணீயம் _______ பாவால் அமைந்துள்ளது.**

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா இ) கலிப்பா **விடை : அ) ஆசிரியப்பா**

3. **''நீராருங் கடலுடுத்த'' என்னும் தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்றுள்ள நூல் _______.**

அ) கம்பராமாயணம் ஆ) வில்லிபாரதம் இ) மனோன்மணீயம்

**விடை : இ) மனோன்மணீயம்**

4. **மனோன்மணீயத்தில் இடம் பெற்றுள்ள கிளைக்கதை**

அ) சிவகாமியின் சரிதம் ஆ) சிவகாமியின் சபதம்

இ) சிவகாமியின் செல்வன் **விடை : ஆ) சிவகாமியின் சரிதம்**

5. **திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழையில் 1855 இல் பிறந்தவர் _______.** மார்ச்-2020

அ) வில்லிபுத்தூரார் ஆ) அப்துல் ரகுமான் இ) பெ.சுந்தரனார் **விடை : இ) பெ.சுந்தரனார்**

6. **பெ.சுந்தரனார், திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் _______ பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.**

அ) தமிழ்த்துறைப் ஆ) தத்துவப் இ) கணிதப் **விடை : ஆ) தத்துவப்**

7. **சுந்தரனாருக்குப் சென்னைப் பல்கலைக்கழகம் _______ பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.**

அ) இராவ்பகதூர் ஆ) கலை இலக்கிய இ) கலைமாமணி **விடை : அ) இராவ்பகதூர்**

8. **தமிழக அரசு பெ.சுந்தரனார் பெயரில் _______ இல் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது.**

அ) திருச்சியில் ஆ) திருநெல்வேலியில் இ) மதுரையில் **விடை : ஆ) திருநெல்வேலியில்**

9. **நாடகக் துறைக்குத் தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையினைத் தீர்க்க வந்த நாடக நூல் ____.**

அ) சீறாப்புராணம் ஆ) மணிமேகலை இ) மனோன்மணியம்

**விடை : இ)மனோன்மணீயம்**

10. **உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்து - யார்?**

அ) நாங்கூழ்ப்புழு ஆ) வாய்க்கால் இ) புல் **விடை : அ) நாங்கூழ்ப்புழு**

# II. குறுவினா

## புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **'ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள' இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?** மார்ச்-2020 மே-2022

'ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள' - என்னும் அடிகள் நாங்கூழ்ப்புழுவைக் குறிப்பிடுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அகநிலை வினாக்கள்:–

1. **தமிழ் நாடக இலக்கண நூல்கள் சிலவற்றைக் கூறுக.**

**தமிழ் நாடக இலக்கண நூல்கள்:-**

1. அகத்தியம் 2. குணநூல் 3. கூத்த நூல் 4. சந்தம் 5. சயந்தம் 6.செயன்முறை 7. செயிற்றியம் 8. முறுவல் 9. மதிவாணனார் நாடக இலக்கண நூல் 10. நாடகவியல்

2. **நில்! நில்! இரைந்ததென்? அழுவையோ? யார், யாரிடம் கூறியது?**

நில்! நில்! இரைந்ததென்? அழுவையோ? என்ற அடிகள் வாய்க்காலிடம் நடராஜன் கூறியது ஆகும்.

3. அற்பமே ஆயினும் ஆதர வாய்க்கொள்
இது எதனிடம் யார் கூறியது?
அற்பமே ஆயினும் ஆதர வாய்க்கொள்
இது வாய்க்காலிடம் நடராஜன் கூறியது.

## III. சிறுவினா

## புத்தக புறநிலை வினாக்கள்:–

1. **வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?** மே -2022

**வாய்க்காலின் சிறப்புகள்:-**

- பயிர் விளையும் வயலுக்குப் பயன்படக் கூடிய சிறு வாய்க்கால் செய்யும் வேலைகள் வியப்பைத் தருகின்றன
- வாய்க்கால் புரண்டோடி வரும் போது கற்களையும் நொறுக்கி நுண்ணிய மலைகளாக மாற்றுகின்றன.
- தன் வலிமைக்கு அடங்கிய மண், கல், புல், புழு யாவையும் அடித்துக் கொண்டு சென்று கடலினை அடைகிறது.
- பின்பு கதிரவனின் கதிர்ஒளியில் ஆவியாகி மீண்டும் மழையெனப் பொழிந்து பெரிய மலைகளிலுள்ள சிகரத்தை அடைகிறது.
- பின்பு, குன்றுகள் வழியே வழிந்தோடி அருவியாய் விழுந்து பூமியின் பல பாகங்களின் வழியாகவும் நுழைந்து, சுனையாகவும் குதித்தெழுந்து ஓடியது, சிறிய நீர் ஊற்றாய் பரந்து விரிந்து ஆறாய் நடந்தும், மதகு வழியே அடைபட்டும், வாய்க்கால் வழியே ஓடியும் பல பாடுகளைப்படுகிறது.
- பின்பு கடலினையும், மேகத்தினையும் அடைந்து தன் செயலை இரவு பகல் பாராது நிரந்தரம் உழைத்துக் கொண்டே இருக்கிறது.

2. **இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.**

**இயற்கையுடன் உரையாடல்**

பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் சீருடைய மாற்றி விட்டு, சிறிது நேரம் என் நண்பர்களுடன் விளையாடச் செல்வது வழக்கம். இன்று அவர்கள் யாரும் வரவில்லை. நான் மட்டும் நடந்து சென்றேன். செல்லும் வழியில் என்னை முந்திக் கொண்டு சருகுகள் பறந்தது.

நான் : ஏ! சருகே, ஏன் என்னை முந்திச் செய்கிறாய்?

சருகு : திருப்பிப்பார்! காற்று எவ்வளவு பலமாக அடிக்கிறது. என்னால் தாங்கிக் கொண்டு நிற்க இயலவில்லை.

நான் : இந்தக் காற்றிற்கே பறந்து விட்டாயா?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



சருகு : நானா செல்கிறேன். அதுவே என்னையும் தூக்கிக்கொண்டு செல்கிறது. ஐய்யய்யோ ... தலை சுற்றுகிறதே....

(சிரித்தவாறே அருகில் வேலியிலிருந்த கொடியைப் பார்த்தேன்)

நான் : கொடியே நீ ஏன் மின்கம்பத்தில் மாட்டிக் கொண்ட பட்டத்தைப் போல் மேலேயெழுந்து கீழே விழுகிறாய்?

கொடி : இந்தக் காற்று தான் என்னைப் பாடாய்ப் படுத்துகிறதே!

நான் : நான் வேண்டுமானால் உனக்கு உதவி செய்யட்டுமா?

கொடி : உனக்குப் புண்ணியமாகப் போகும். சீக்கிரம் செய்.

(மெல்லிய கொடியினை எடுத்து வேலியில் நன்கு சுற்றி விட்டேன்)

கொடி : நன்றி! தோழரே!

(பின்னால் வந்த காற்றை நோக்கி நான்)

நான் : காற்றே பார்த்தாயா? உன்னைக் கண்டு சருகுகளும் மெல்லிய கொடிகளும் பயப்படுகின்றன. கொஞ்சம் உன் வேகத்தைக் குறைத்துக் கொள்வாயா?

காற்று: நான் என் வேலையைத் தானே செய்கிறேன்.

நான் : சற்று ஓய்வெடுத்து விட்டுச் செல்லுங்களேன்.

காற்று: நான் எப்படி வீசினாலும் யாராவது குறை கூறிக் கொண்டே இருக்கிறார்கள். எனக்குப் பழகிப்போய் விட்டது. சரி உன்னை மாதிரி என்னால் ஓரிடத்தில் நின்றோ அமர்ந்தோ ஓய்வெடுக்க இயலாது. நான் ஓய்வெடுத்தால் சற்று யோசித்துப்பார். இந்த உலகம் என்னவாகும் என்று? புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட்படுத்திக் கொள்ளாமல் இருந்தால் தான் நாம் நாமாகவே இருந்து தம் கடமையைச் செவ்வனே ஆற்ற முடியும்.

நான் : உண்மையான ஆலோசனை. நீங்கள் கூறுவது மிகவும் சரியானதே!

காற்று: நல்லது! சென்று வருகிறேன் தம்பி!

நான் : நன்றி! அண்ணா!

(இயற்கையோடு உறவாடிய இந்த உரையாடல் என் மனத்திற்கும் உடலுக்கும் மிகுந்த தெம்பினைத் தந்தது. காற்றின் அறிவுரையைக் கேட்ட நான் வீட்டிற்கு வந்தவுடன் அதைப்போல் என் வேலைகளில் செயல்படலானேன்.)

## அகநிலை வினாக்கள்:-

1. **மனோன்மணீயம் பற்றி குறிப்பு வரைக.**

மனோன்மணீயம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூல். லிட்டன் பிரபு 1866 இல் எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலைத் தழுவி 1891 இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதியுள்ளார். இது எளிய நடையில் ஆசிரியப்பாவால் அமைந்தது. இந்நூல் ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது. நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை 'சிவகாமியின் சரிதம்'.

2. **பேராசிரியர் சுந்தரனார் பற்றி குறிப்பு வரைக.**

பேராசிரியர் சுந்தரனார் திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழையில் 1855 இல் பிறந்தார். திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் தத்துவப் பேராசியராகப் பணியாற்றி உள்ளார். சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு 'இராவ்பகதூர்' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசு, இவர் பெயரால் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IV. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.**

**நடராசன் தனிமொழிகள் :**

**முன்னுரை:**

மனோன்மணீயத்தில் சுந்தர முனிவர் தனக்கு அளித்த சுரங்கம் தோண்டும் பணியைச் செய்கிறான் நடராசன். ஒரு நாள் ஊரின் புறமாகத் தனித்திருக்கும் வேளையில், இயற்கையின் செயல்பாடுகளை எண்ணிப்பார்த்துத் தனக்குத் தானே பேசிக் கொள்கிற தனிமொழியிலிருந்து நான் அறிந்த கருத்துகளை விவரிக்க உள்ளேன்.

**இலக்கு வேண்டும் :**

- காலை வேளையில் ஊரின் புறமாகத் தனித்திருக்கும் வேளையில் நடராஜன் தனக்குத் தானே பேசிக்கொள்கிறான்.
- தான் செய்ய வேண்டிய வேலை இன்றிரவு முடிந்துவிடும். நாம் வாழ்க்கையில் அடுத்தடுத்த நிலையினை அடைய இலக்கு வைத்துக் கொண்டு அதை நோக்கிச் செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இது தான் நம் உயிருக்குத் தூண்டுகோலாகும். இவ்வுலகில் எந்தப் பொருள் தான் இலக்கின்றி இருக்கிறது என இயற்கையை நோக்குகிறான்.

**புல்லின் பரிவு :**

- கரையிலுள்ள சிறு புல் கூட தினந்தினம் தன் வேலையைச் செய்து பூக்களைத் தந்து அதனைக் காய் ஆக்கும் இலக்கினை அடையும் வரை தன் வேலையை இடையறாது தொடர்ந்து செய்கிறது.
- தன் பூக்களிலுள்ள தேன் துளிகளால் ஈக்களை அழைத்து விருந்தளித்து, அவற்றின் மூலம் தன் மகரந்தத்தூள்களைப் பரப்புகிறது,
- அவற்றைக் குற்றமில்லாத சிறுசிறு காய்களாக உருவாக்கி, அவற்றிற்குத் துறட்டி போன்ற ஓர் அமைப்பையும் கொடுத்து புல்லின் சிறார்களான சிறுசிறு காய்களை இங்கு தழைப்பதற்கு இடமில்லை புல்லை உண்ண வரும் பசு, காளை மீதும், புல்லில் அமரும் பறவைகள் மீதும் ஒட்டிக்கொண்டு வேறு இடம் சென்று வளருங்கள் என்று கூறி, தன் இனத்தைப் பரப்பச் செய்கிறது.
- இதிலிருந்து புல்லின் இரக்கத்தையும், பொறுமையையும், தன் இனத்தைப் பரவச் செய்யும் அறிவையும் நாம் காணலாம்.
- இதைக் கண்டுணர்ந்தவர்கள் இனி எந்த ஒன்றையும் சிறுமையாகக் கருத மாட்டார்கள்,
- ஆங்காங்கே நம் கண்ணுக்குப் புலப்படும் இயற்கையின் பேரழகையும் ஆற்றலையும் அன்பையும் முயற்சியையும் பார்ப்பவர் தம் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சிந்தி, இவ்வுலகிலுள்ள அனைத்தையும் சிறுமையாகவும் இழிவாகவும் கருதாமல் அதனதன் முயற்சியைக் கண்டு போற்றி வாழும் இன்பத்தினை அடைவர்.
- புல்லின் பரிவையும், பொறுமையையும், அதன் புலனையும் கண்டு உணர்வோர் இவ்வுலகில் சிறுமை என்பதைச் சிந்தனையிலே வைக்க மாட்டார்கள்.

**வாய்க்காலின் விசித்திரம் :**

- பயிர் விளையும் வயலுக்குப் பயன்படக் கூடிய சிறு வாய்க்கால் செய்யும் வேலைகள் வியப்பைத் தருகின்றன.
- வாய்க்கால் புரண்டோடி வரும் போது கற்களையும் நொறுக்கி நுண்ணிய மலைகளாக மாற்றுகின்றன.
- தன் வலிமைக்குள் அடங்கிய மண், கல், புல், புழு யாவையும் அடித்துக் கொண்டு சென்று கடலினை அடைகிறது.
- பின்பு கதிரவனின் கதிர் ஒளியில் ஆவியாகி மீண்டும் மழையெனப் பொழிந்து பெரிய மலைகளிலுள்ள சிகரத்தை அடைந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பின்பு குன்றுகள் வழியே வழிந்தோடி அருவியாய் விழுந்து பூமியின் பல பாகங்களின் வழியாகவும் நுழைந்து, சுனையாகவும் குதித்தெழுந்து ஓடியும், சிறிய நீர் ஊற்றாய்ப் பரந்து விரிந்து ஆறாய் நடந்தும், மதகு வழியே அடைபட்டும், வாய்க்கால் வழியே ஓடியும் பல பாடுகளைப்படுகிறது.
- பின்பு கடலினையும், மேகத்தினையும் அடைந்து தன் செயலை இரவு பகல் பாராது தினமும் உழைத்துக் கொண்டே இருக்கிறது.

**நாங்கூழ்ப்புழுவின் பொதுநலம் :**

- உழுது உழைத்து வேலை செய்யும் உழுவர்களுக்கு வேந்தனாகிய மண்புழுவைப் பார்க்கிறான்.
- மண்ணை, தன் உடலால் உழுது நாள்தோறும் வேலை செய்கிறது.
- புழு இவ்வாறு சேற்றில் உருண்டு உழுது மண்ணைத் தரமாக்கித் தரவில்லை என்றால் அதில் புல்லும், பயிரும் எவ்வாறு வளரும்?
- ஒழுக்கமும் பொறுமையும் மிகுந்தது மண்புழு
- தன்னலம் கருதாமல் உலகத்தார்க்குச் செய்யும் இடையறாத செயல்களால் இயற்கை என்றும் போற்றுதற்குரியதே!

**முடிவுரை:**

நடராசனின் தனிமொழி மூலம் புல், வாய்க்கால், நாங்கூழ்ப்புழு போன்ற இயற்கைப் படைப்புகளும் உயிரினங்களும் தங்கள் செயல்களைச் செவ்வனே செய்கின்றன என்பதை அறியலாம். தன்னலம் கருதாத தன்மையும், அயராது பிறருக்காகப் பாடுபடும் உழைப்பும் பற்றிக் கூறுவதிலிருந்து அனைத்து உயிரினங்களும், இயற்கைப் படைப்புகளும் மேன்மையானவையே என்று அறியலாம்.

## V. இலக்கணக் குறிப்பு தருக

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

- கடி நகர், சாலத் தகும் - உரிச்சொற்றொடர்கள்
- உருட்டி - வினையெச்சம்
- பின்னிய, முளைத்த - பெயரெச்சங்கள்
- இளமுகம், நல்லூண், சிறுபுல், பேரழகு, முந்நீர், நன்மண் - பண்புத்தொகைகள்
- பூக்குலை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொடக்க தொகையும்
- ஆசிலா, ஓவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்,
- ஏகுமின் - ஏவல் பன்மை வினைமுற்று
- பார்த்துப் பார்த்து, நில் நில், உழுதுழுது - அடுக்குத் தொடர்கள்
- வாய்க்கால் - இலக்கணப் போலி (முன் பின் தொக்கியது)
- செய்தொழில், அலைகடல் வீழருவி - வினைத்தொகைகள்
- மலையலை, குகைமுகம் - உவமைத்தொகைகள்
- நெறுநெறு - இரட்டைக்கிளவி
- புல்புழு, இராப்பகல் - உம்மைத்தொகைகள்
- காலத்தச்சன் - உருவகம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- ஏகுதி - ஏவல் ஒருமை வினைமுற்று
- புழுக்களும் பூச்சியும் - எண்ணும்மை
- தங்குதல் - தொழிற்பெயர்

## VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

**1. முளைத்த - முளை + த் + த் + அ**
முளை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**2. ஏகுமின் - ஏகு + மின்**
ஏகு - பகுதி
மின் - ஏவல் வினைமுற்று விகுதி

**3. விடுத்தனை - விடு + த் + த் + அன் + ஐ**
விடு - பகுதி.
த் - சந்தி,
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
ஐ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**4. சென்ற - செல் (ன்) + ற் + அ**
செல் - பகுதி ('ல்' 'ன்' ஆனது விகாரம்)
ற் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி.

**4. காணார் - காண் + ஆ + ஆர்**
காண் - பகுதி
ஆ - எதிர்மறை இடைநிலை
ஆர் - பலர் பால் வினைமுற்று விகுதி

**5. கடந்து - கட+ த்(ந்) + த் + உ**
கட - பகுதி
த் - சந்தி 'த்' 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**6. தாங்கி - தாங்கு + இ**
தாங்கு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

**7. அழைத்து - அழை + த் + த் + உ**
அழை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**8. ஆக்கி - ஆக்கு + இ**
ஆக்கு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

**9. காண்போர் - காண் + ப் + ஓர்**
காண் - பகுதி
ப் - சந்தி
ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**10. பார்த்து - பார் + த் + த் + உ**
பார் - பகுதி
த் - சந்தி
த - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**11. கலந்து - கல + த்(ந்) + த் + உ**
கல - பகுதி
த் - சந்தி 'த்' - 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

### அகநிலை வினாக்கள்:–

**1. உயர்த்தி - உயர் + த் + த் + இ**
உயர் - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
இ - வினையெச்ச விகுதி

**2. உணர்வேன் - உணர் + வ் + ஏன்**
உணர் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**3. உழுவோர் - உழு + வ் + ஓர்**
உழு - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஓர் - பலர் பால் வினைமுற்று விகுதி

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**12. திளைப்பர் - திளை + ப் + ப் + அர்**
திளை - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**13. அடங்கிய - அடங்கு + இ(ன்) + ய் + அ**
அடங்கு - பகுதி
இ(ன்) - இறந்தகால இடைநிலை 'ன்' - புணர்ந்து கெட்டது விகாரம்
ய் - உடம்படுமெய் சந்தி
அ - பெயரெச்ச விகுதி

**14. ஈர்த்து - ஈர் + த் + த் + உ**
ஈர் - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**15. உருட்டி - உருள்(ட்) + ட் + இ**
உருள் - பகுதி, 'ள்' - 'ட்' ஆகத் திரிந்தது விகாரம்
ட் - இறந்தகால இடைநிலை
இ - வினையெச்ச விகுதி

**16. மறந்து - மற + த்(ந்) + த் + உ**
மற - பகுதி
த் - சந்தி, 'த்' - 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**17. விடுத்தனை - விடு + த் + த் + அன் + ஐ**
விடு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
ஐ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**18. உண்டு - உண் + ட் + உ**
உண் - பகுதி
ட் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

## VII. புணர்ச்சி விதி தருக

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

**1. காலத்தச்சன் - காலம் + தச்சன்**

(i) "மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்" - என்ற விதிப்படி
'ம் நீங்கியது
= கால + தச்சன் - ஆனது

(ii) "இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்" - என்ற விதிப்படி
த் - மிகுந்தது
= காலத்தச்சன் என்று புணர்ந்தது

**2. உழுதுழுது - உழுது + உழுது**

(i) "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" - என்ற விதிப்படி
து - த் + உ - உ நீங்கியது
உழுத் + உழுது

(ii) "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" - என்ற விதிப்படி
த் + உ = து ஆனது
= உழுதுழுது என்று புணர்ந்தது

**3. பேரழுகு - பெருமை + அழகு**

(i) ஈறு போதல் - என்ற விதிப்படி
மை கெட்டது
பெரு + அழகு - ஆனது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



(ii) "ஆதி நீடல் " - என்ற விதிப்படி
பெ - பே ஆனது
பேரு + அழகு - ஆனது

(iii) "இனையவும் " - என்ற விதிப்படி
'உ' கரம் கெட்டது
ர் + உ - பேர் + அழகு

(iv) "உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"- என்ற விதிப்படி
'உ' கரம் கேட்டது
ர் + அ = 'ர' ஆனது
= பேரழகு என்று புணர்ந்தது.

---

**அகநிலை வினாக்கள்:–**

**1. பெருமலை - பெருமை + மலை**

(i) 'ஈறுபோதல் - என்ற விதிப்படி
மை கெட்டது
பெரு + மழை
- பெருமலை என்று புணர்ந்தது

---

**2. பற்பல - பல + பல**

(i) 'பலசில எனுமிவை தம்முன் தாம் வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக" - என்ற விதிப்படி 'அ' நீங்கியது
ல + ல் + அ
= பல் + பல - ஆனது

(ii) "லகரம் றகரம் ஆகலும் " - என்ற விதிப்படி
'ல்' + 'ற்'ஆனது
பற்பல என்று புணர்ந்தது

---

**3. எவ்வினையோர்க்கும் - எவ்வினை + ஓர்க்கும்**

(i) " இ ஈ ஐ வழி யவ்வும்" - என்ற விதிப்படி
ய் - உடம்படுமெய் மிகுந்தது
எவ்வினை + ய் + ஓர்க்கும்

(ii) "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே " - என்ற விதிப்படி
ய் + ஓ = 'யோ' - ஆனது
= எவ்வினை யோர்க்கும்
= என்று புணர்ந்தது.

---

**4. நலமுற - நலம் + உற**

(i) " உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே"- என்ற விதிப்படி
ம் + உ= 'மு' - ஆனது
= நலமுற
= என்று புணர்ந்தது.

---

**5. பூம்பராகம் - பூ + பராகம்**

(i) " பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும்" - என்ற விதிப்படி
'ப்' ற்கு இனமான 'ம்' - மிகுந்தது
= பூம்பராகம்
= என்று புணர்ந்தது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **தூசிடை - தூசு + இடை**

(i) " உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" - என்ற விதிப்படி

து = த் + உ

'உ' நீங்கியது

தூச் + இடை

(ii) " உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" - என்ற விதிப்படி

ச் + இ = சி

= தூசிடை

= என்று புணர்ந்தது

7. **யாமெலாம் - யாம் + எலாம்**

(i) " உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" - என்ற விதிப்படி

ம் + எ - 'மெ' - ஆனது

= யாமெலாம்

= என்று புணர்ந்தது

8. **ஆங்காங்கு - ஆங்கு + ஆங்கு**

(i) " உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" - என்ற விதிப்படி

கு = க் + உ

'உ' நீங்கியது

ஆங்க் + ஆங்கு

(ii) " உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" - என்ற விதிப்படி

க் + ஆ = 'கா' ஆனது

= ஆங்காங்கு

= என்று புணர்ந்தது

9. **இன்னதென்று - இன்னது + என்று**

(i) " உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" - என்ற விதிப்படி

து = த் + உ

'உ' நீங்கியது

இன்னத் + என்று

(ii) " உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" - என்ற விதிப்படி

த் + எ = 'தெ' ஆனது

= இன்னதென்று

= என்று புணர்ந்தது

10. **குதித்தெழுந்து - குதித்து + எழுந்து**

(i) " உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" - என்ற விதிப்படி

து = த் + உ

'உ' நீங்கியது

குதித்த் + எழுந்து

(ii) " உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" - என்ற விதிப்படி

த் + எ = 'தெ' ஆனது

= குதித்தெழுந்து

= என்று புணர்ந்தது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**11. மதகிடை – மதகு + இடை**

(i) " உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" – என்ற விதிப்படி
கு = க் + உ
'உ' நீங்கியது
மதக் + இடை

(ii) "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – என்ற விதிப்படி
க் + இ = 'கி' ஆனது
= மதகிடை
= என்று புணர்ந்தது

**12. பிணைப்பேறு – பிணை + பேறு**

(i) " இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" – என்ற விதிப்படி
'ப்' மிகுந்தது
= பிணைப்பேறு
= என்று புணர்ந்தது

**13. உழுவோர்க்கெல்லாம் – உழுவோர்க்கு + எல்லாம்**

(i) " உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" – என்ற விதிப்படி
கு = க் + உ
'உ' நீங்கியது
= உழுவோர்க்ச் + எல்லாம்

(ii) " உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – என்ற விதிப்படி
க் + எ = 'கெ' ஆனது
= உழுவோர்க்கெல்லாம்
= என்று புணர்ந்தது

**14. வெளிக்கொணர்ந்து – வெளி + கொணர்ந்து**

(i) " இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" – என்ற விதிப்படி
'க்' மிகுந்தது
= வெளிக்கொணர்ந்து
= என்று புணர்ந்தது

**15. பங்கமில் = பங்கம் + இல்**

(i) " உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – என்ற விதிப்படி
ம் + இ + 'மி' ஆனது
= பங்கமில்
= என்று புணர்ந்தது

## துணைப்பாடம்: செவ்வி – நர்த்தகி நடராஜ்

### நம்மை அளப்போம்

## I. பலவுள் தெரிக:

### புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.**
அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.
இ) இலக்கிய மேடைகளில் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

**விடை : (ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.**

## அகநிலை வினாக்கள்:–

1. **'செவ்வி' என்னும் சிறுகதையின் ஆசிரியர். மார்ச்-2020**
அ) புதுமைப்பித்தன் ஆ) நர்த்தகி நடராஜ்
இ) பிரபஞ்சன் ஈ) சி.சு. செல்லப்பா **விடை : ஆ) நர்த்தகி நடராஜ்**

2. **இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர் ....................**
அ) நர்த்தகி நடராஜ் ஆ) பிரித்திகா யாஷினி
இ) ஜோயிதா மோண்டல் மாஹி ஈ) தாரிகா பானு **விடை : ஆ) பிரித்திகா யாஷினி**

3. **இந்தியாவின் முதல் திருநங்கை லோக் அதாலத் நீதிபதி ....................**
அ) நர்த்தகி நடராஜ் ஆ) பிரித்திகா யாஷினி
இ) ஜோயிதா மோண்டல் மாஹி ஈ) தாரிகா பானு
**விடை : இ) ஜோயிதா மோண்டல் மாஹி**

4. **தமிழ்நாட்டில் மூன்றாம் பாலினப் பிரிவில் பள்ளிப்படிப்பை முடிக்கும் முதலாமவர் ....................**
அ) நர்த்தகி சடராஜ் ஆ) பிரித்திகா யாஷினி
இ) ஜோயிதா மோண்டல் ஈ) தாரிகா பானு **விடை : ஈ) தாரிகா பானு**

5. **''அடுத்த ஜென்மத்தில் நான் தமிழனாகப் பிறந்து திருக்குறள் படிக்க வேண்டும்'' என்று ஆசைப்பட்டவர்**
அ) ஜி.யு.போப் ஆ) மகாத்மா காந்தி
இ) கால்டுவெல் ஈ) வீரமாமுனிவர் **விடை : ஆ) மகாத்மா காந்தி**

6. **2011-ஆம் ஆண்டு கணினிப் பாடப்பிரிவு இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திருநங்கை.**
அ) ஜோயிதா மோண்டல் மாஹி ஆ) செவ்வி நர்த்தகி நடராஜ்
இ) தாரிகா பானு ஈ) பிரித்திகா யாஷினி
**விடை : ஈ) பிரித்திகா யாஷினி**

# II. நெடுவினா

## புத்தகப் புறநிலை வினாக்கள்:–

1. **நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க :**

**முன்னுரை :**

முத்தமிழ் வளர்த்த மதுரையில் அனுப்பானடியில் பிறந்தவர் நர்த்தகி நடராஜ். தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி, கொண்டு திருநங்கைகளுக்கு இருக்கும் தடைக்கற்களைப் படிக்கட்டுகளாக மாற்றி, நாட்டியக்கலையில் தனக்கெனத் தனியிடம் பெற்றவர்.

**பரதத்தில் பெண்மை :**

குருவான தஞ்சை கிட்டப்பாவிடம் கற்றார். அவரே நர்த்தகி, என்னும் பெயரைச் சூட்டினார். பரதத்தில் பெண்மையை வெளிப்படுத்தும் நொடியை, வார்த்தைகளால் சொல்ல முடியாத உணர்வு என்கிறார். நதியலையில் விழுந்த இலை போல, காற்றில் பறக்கும் இறகுபோல, மனம் அதன் போக்கில் செல்லும் அந்த விநாடிகளில் உலகத்தையே மறந்து பறந்து கொண்டிருப்பேன் என்று தன் உள்ளுணர்வினை வெளிப்படுத்துகிறார்.

**விழிப்புணர்வு ஆயுதம் :**

திருநங்கையர்க்கான இடம் என்ன? என்பதை நினைத்தேன், இலக்கியம் பக்கம் திரும்பினேன். எல்லாக் காலக்கட்டத்திலும் திருநங்கையர் இருந்திருக்கின்றனர். தொல்காப்பியத்திலும் சிலப்பதிகாரத்திலும் அதற்கான சான்றுகள் உள்ளன. அதிலும் 'வேளிர் ஆடல்' முக்கியமானது. சங்க இலக்கியம் தொடங்கி தற்போதைய நவீன கவிதை வரையிலும் நடனத்தில் முயல்கிறேன். இதுவும் ஒரு வகை விழிப்புணர்வு ஆயுதம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அரசு பொதுத் தேர்வு - மார்ச் 2023

[கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90]

**அறிவுரைகள் :** 1) அனைத்து வினாக்களும் சரியாகப் அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I **14×1=14**

i) **அனைத்து வினாக்களுக்கும்** விடை தருக.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக

1. பாயிரம் இல்லது ________ அன்றே.
அ) பாடல் ஆ) காவியம் இ) கவிதை **ஈ) பனுவல்**

2. "காவடிச் சிந்துக்குத் தந்தை" என்று அழைக்கப்படுபவர்:
அ) முருகன் ஆ) பாரதிதாசன் இ) பாரதியார் **ஈ) அண்ணாமலையார்**

3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ________.
அ) ஊடுபயிர் ஆ) இயற்கை உரங்கள் இ) மண்புழு **ஈ) இவை மூன்றும்**

4. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள்:
அ) பகுதி, சந்தி, விகாரம்
ஆ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
**இ) பகுதி, விகுதி**
ஈ) பகுதி, இடைநிலை, சாரியை

5. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை:
**அ) 27** ஆ) 9 இ) 13 ஈ) 3

6. ஆசிரியப்பாவிற்குரிய தளை ________ ஆகும்.
அ) கலித்தளை **ஆ) நிரையொன்றாசிரியத் தளை**
இ) வஞ்சித்தளை ஈ) இயற்சீர் வெண்டளை

7. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று:
அ) சிறுதேர் **ஆ) சாழல்** இ) சிறுபறை ஈ) சிற்றில்

8. 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' – யார், யாரிடம் கூறியது?
**அ) அமைச்சர், மன்னரிடம்** ஆ) அமைச்சர், கவிஞரிடம்
இ) மன்னர், அமுதவல்லியிடம் ஈ) மன்னர், அமைச்சரிடம்

9. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) உதவியாளர் ஆ) காவலாளி **இ) ஆசிரியர்** ஈ) மேலாளர்

10. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்:
அ) நூல் தொகை விளக்கம் ஆ) இரகசிய வழி
இ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு **ஈ) மனோன்மணீயம்**

11. விரைந்து கெடுபவன் யார்?
அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்
ஆ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்
**இ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



43. தமிழாக்கம் தருக.

1. Culture does not make People. People make culture. இயல் - 3, மொழியை ஆள்வோம்
2. You must be the change you wish to see in the world. இயல் - 8, மொழியை ஆள்வோம்
3. Education is the most Powerful weapon which you can use to change the world. இயல் - 3, மொழியை ஆள்வோம்
4. Looking at beauty in the world is the first step of purifying the mind. இயல் - 3, மொழியை ஆள்வோம்

43. **செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.** இயல் - 2, மொழியை ஆள்வோம்

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகே உள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெரு விருப்பம் கொண்டு, நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதை விடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார்; தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கித் தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்'. எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**வினாக்கள் :**

i) தமிழிசை இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
ii) பண்டிதர் விரும்பிப் பயின்ற துறைகள் யாவை?
iii) ஆபிரகாம் பண்டிதர் உருவாக்கிய அமைப்பு எது?
iv) பண்டிதருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் எது?

**பிரிவு - IV**

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும்** விடை தருக. **3×6=18**

44. அ) "மதீனா நகரம் ஒரு வளமான நகரம்" என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

அல்லது இயல் - 5, செய்யுள்

ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்"
இக்கூற்றை முப்பால் வழி விளக்குக. இயல் - 3, திருக்குறள்

45. அ) "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே"
என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக. இயல் - 2, உரைநடை

அல்லது

ஆ) சுந்தரராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின்வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக. இயல் - 7, உரைநடை

46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை?

அல்லது இயல் - 4, துணைப்பாடம்

ஆ) 'பிம்பம்' கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்கவும். இயல் - 5, துணைப்பாடம்

**பகுதி - IV**

**குறிப்பு:** அடிபிறழாமல் எழுதுக. மனப்பாடப்பகுதி **4+2=6**

47. அ) அம்ம வாழி ........ - எனத் தொடங்கும் குறுந்தொகை பாடல்.

ஆ) செயல் - என முடியும் குறள்.

☺ ☺ ☺ ☺ ☺



Kindly send me your study materials to padasalai.net@gmail.com